Registered as a news paper. இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 20 ஆம் நாள் (06.10.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 06

சொலெக்ஸ்
மூக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கல்
செயற்கை மாபிள் கண்களுக்கும்
மற்றும்
பல் கட்டுதல், மிதப்புப் பற்களுக்கு
கிளிப்ஸ் செய்து கொடுத்தல்.
லக்ஷுறி பல்கட்டுமிடம்
232/A, கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/036)

அரச அதிபர் நியமனத்தின் பின்னணிக்கதை

## எட்டு அதிகாரிகள் முண்டியடிக்க எதிர்பாராமல் கிடைத்த பதவி !

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரச அதிபர் பதவிக்காக எட்டு உயர் அரச அதிகாரிகள் முண்டியடித்து முயற்சி செய்து கொண்டிருந்த சமயத்தில் சற்றும் எதிர்பாராத விதமாக புதிய அரச அதிபராக செ.பத்மநாதன் அதிரடியாக நியமிக்கப்பட்டதன் பின்னணி சுவாரசியமானது.

நேற்று முன்தினம் காலை 11.41 மணியளவில் பிரதமரின் அலுவலகத்திலிருந்து அவசர பக்ஸ் செய்தி ஒன்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்குப் பறந்தது.

இதனையடுத்து சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகக் கடமையில் இருந்த செ.பத்மநாதனுக்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிடம் இருந்து அவசர அழைப்பு விடுக்கப்பட்டது. அங்கு விரைந்தார் செ. பத்மநாதன்.

அவரிடம் யாழ்.அரச அதிபர் பதவியை உடனடியாகப் பொறுப்பேற்கும்படி கோரப்பட்டது.

தொடர்ந்து இதற்கான ஆவணங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு பக்ஸ் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டன. (10ஆம் பக்கம் பார்க்க)

விண்ணாணம் விநாசியர்



நடக்கும் என்பார் நடக்காது
நடக்காது என்பார் நடந்து விடும்

## யாழ்ப்பாணத்தைப் புனரமைப்பதே எனது முதலாவது செயற்பாடாகும்!

புதிய அரச அதிபர் பத்மநாதன்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் சிதைந்து போயுள்ள யாழ்ப்பாணத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக புனரமைப்புப் பணிகளை துரிதப்படுத்துவதும், அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதுமே யாழ்ப்பாணத்தில் எனது முதன்மையான செயற்பாடாக இருக்கப்போகின்றது - இவ்வாறு யாழ். மாவட்டத்துக்கென நியமிக்கப்பட்ட புதிய அரச அதிபர் செ.பத்மநாதன் நமது ஈழநாடு பத்திரிகைக்கு வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்தார்.

யுத்தத்துக்கு பின்னரான தற்போதய சமாதான காலத்தில் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய பல அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப்பணிகள் உள்ளன. இவற்றை நீண்ட நோக்குடன் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. நான் பிறந்த மாவட்டம் என்ற வகையில் மேற்படி வேலைகள் மிகவும் திறமையாகவும், துரிதமாகவும் செயற்படுத்த வேண்டிய கடமையும் கடப்பாடும் எனக்கு உண்டு. இதன் அடிப்படையில் தான் யாழ்ப்பாணத்தில் எனது பணிகள் அமையும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (10ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.வைத்தியசாலையைச் சூழவுள்ள ராணுவ முகாம்களை உடன் அகற்றுக!

## யாழ். அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் நேற்று ஏகமனதாகத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சூழவுள்ள இராணுவ முகாங்களும் காலரண்களும் உடனடியாக அகற்றப்பட்டு சகல பாதைகளும் முழுமையாகப் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்படவேண்டும் என்று யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

நேற்றுக்காலை யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டம் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது. தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் வீ. ஆனந்த சங்கரி கனடாவில் உள்ளதால் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

தமிழர் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ந. ரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விநாயகமூர்த்தி, யாழ்ப்பாண அரசாங்க அதிபர் து. வைத்தியலிங்கம், கிளிநொச்சி அரசாங்க அதிபர் இராசநாயகம், ஆகியோருடன் உதவி அரசாங்க அதிபர்கள், சகல திணைக்களங்களினதும் தலைவர்கள், ஏனைய துறை சார்ந்த அதிகாரிகள், சில உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் முதன் முறையாகக் கூட்டப்பட்ட இக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்திற்கு முன்னதாக (10 ஆம் பக்கம் பாக்க)

## அரசாங்கமும் புலிகளும் நோபல் பரிசுத் தேர்வில்!

(ஒஸ்லோ)

இந்த வருடத்துக்கான நோபல் சமாதானப் பரிசுக்குரிய போட்டியாளர்களில் அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இடம் பெற்றுள்ளதாக நம்பப்படுகிறது.

இவ்வாண்டுக்கான நோபல் சமாதானப் பரிசுக்குரியவரைத் தெரிவு செய்வதற்கான குழு 156 பேரின் பெயர்களைப் பரிசீலித்து வருகின்றது.

இந்த 156 பேரில் அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அடங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நோபல் சமாதானப் பரிசை வழங்குவதற்கு பரிசீலிக்கப்படும் 156 பேரில் 117 பேர் தனிப்பட்ட நபர்கள் மற்றும் 39 அமைப்புக்கள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை - இவ் வருடத்துக்கான நோபல் சமாதானப் பரிசைப் பெறுபவரது பெயர் தீர்மானிக்கப்பட்டுவிட்டதாகவும், எதிர்வரும் 11ஆம் திகதியே பெயர் வெளியிடப்படும் என்றும் தெரிவுக் குழு அறிவித்துள்ளது.

## பாலாவை எதிர்பார்த்து செய்தியாளர்கள் தவம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் அவரது மனைவியார் திருமதி அடேல் பாலசிங்கமும் கொழும்புக்கு வருகை தருவார்கள் என்ற பலத்த எதிர்பார்ப்பு நேற்று மாலையிலிருந்து நிலவியது.

ஊடகவியலாளர்கள் புகைப் படக்கருவிகள், வீடியோக்கமராக்களுடன் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் காத்துக்கிடந்தனர் என்று எமது கொழும்பு நிருபர் நேற்று இரவு தெரிவித்தார்.

உள்ளே...
கைதிகளின் கண்ணீர்க் கடிதம்
விளையாட்டு அரங்கம் சிறப்பிதழ்
அபிவிருத்திச் சபைக் கூட்ட செய்திகள், படங்கள்

## தீருவில் புனிதத்திடலில் பொதுமக்கள் அஞ்சலி

(வடமராட்சி)

குமரப்பா,புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளின் நினைவுக் கூட்டம் நேற்று தீருவில் புனிதத் திடலில் நடைபெற்றது. பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ந.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இவ்வஞ்சலிக்கூட்டத்தில் ஈகச்சுடரினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றி வைத்தார். போராளிகளும் பொதுமக்களும் கொடி வணக்கம் செலுத்தினர்.

தூபியில் உள்ள பன்னிரு வேங்கைகளின் திருவுருவப் படங்களுக்கு போராளிகளும் பொதுமக்களும் ஈகச்சுடர் ஏற்றி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். புகைக்கூடுகளும் பறக்க விடப்பட்டன. அஞ்சலியைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இசைக்கச்சேரிகளும் நடைபெற்றன.

பிந்திய செய்தி

## பலாலித் தளத்திற்கு புதிய வேலி அமைப்பது மக்களால் தடுப்பு!

(அச்சுவேலி)

பலாலிப் படைத்தளத்தின் தற்போதுள்ள எல்லையிலிருந்து மேலும் ஒரு கிலோ மீற்றர் பகுதியை உள்ளடக்கி இராணுவத்தினர் வேலி அமைக்க மேற்கொண்ட முயற்சியை வளலாய் செம்பாட்டுப் பகுதியில் மக்கள் தடுத்தனர்.

இதையடுத்து ஏற்பட்ட வாக்குவாதத்தில் வலி.கிழக்கு பிரதேச சபையின் உப தலைவரும் அச்சுவேலி பகுதி ஈ.பி.டி.பி பொறுப்பாளருமாகிய யு.எல்.ஏ.ரவி என்பவர் அங்கு கூடியிருந்த மக்களால் தாக்கப்பட்டார்.

அச்சுவேலி- வசாவிளான் வீதியில் மக்கோனாச் சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக உள்ள அன்பகம் கன்னியாஸ்திரிகள் இல்லத்துக்கு வடகிழக்காக ஆரம்பமாகும் இந்த வேலியை அச்சுவேலி (10 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் ஈ.பீ.டி.பீ அலுவலகம் மக்களால் தீவைப்பு!

(நெடுந்தீவு நிருபர்)

நெடுந்தீவிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகம் பொதுமக்களால் தீவைத்து எரிக்கப்பட்டதாக நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது - நெடுந்தீவில் உள்ள ஈ.பி.டி.பி முகாமுக்கு முன்னால் கடை வைத்துள்ள கந்தப்பிள்ளை லோகநாதன்(வயது 50) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையுடன் மது போதையில் வந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் வாக்குவாதப்பட்டு அவரை வாளால் வெட்டியதாக தெரியவருகின்றது. இதையடுத்து சம்பந்தப்பட்ட நபர் படுகாயமுற்ற நிலையில் நெடுந்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தினால் ஆத்திரமடைந்த மக்கள் ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு நியாயம் கேட்கச் சென்றதாகவும் அதையடுத்து ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து ஈ.பி.டி.பி அலுவலகம் தீவைத்து எரிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

அலுவலகத்தில் இருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்திற்கு (10 ஆம் பக்கம் ...

# வாக்குறுதிகள் வேண்டாம் !
# உடன் விடுதலை செய்யுங்கள் !!

## "களுத்துறைச் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியற் கைதிகள் அனுப்பி வைத்த கண்ணீர்க் கடிதம்

"இச்சமாதான சூழ்நிலையில் மனிதாபிமான அடிப்படையில் - தண்டனை பெற்ற, மற்றும் விளக்க மறியலிலுள்ள சகல தமிழ் அரசியற் கைதிகளையும் முறையே பொது மன்னிப்பிலும், எந்தவொரு நிபந்தனையுமின்றி உடன் விடுவியுங்கள்" எனக் கோரி நாம் ஆரம்பித்துள்ள போராட்டம் எமது விடுதலையுடன் அல்லது சாவுடன் தான் முடிவடையும் என்பதை மீண்டும் எழுத்து மூலமாக அரசிற்கு 03.10.2002 அறிவித்துள்ளோம்.

எமது போராட்டத்தை ஆதரித்து வெலிக்கடைச் சிறையில் 11 பெண் சகோதரிகள், புதிய மகஸீன் சிறையில் 8 சகோதரரும் மட்டு. சிறையில் 16 சகோதரரும் போராட்டத்தில் இணைந்துள்ளனர். நீர்கொழும்புச் சிறையிலுள்ள 16 சகோதரர்கள் விரைவில் தாமும் இதில் இணையவுள்ளதாக எமக்கு அறிவித்துள்ளனர்.

"வாக்குறுதிகள் வேண்டாம் விடுதலை செய்யுங்கள்" என்ற எமது போராட்டத்தில் நாம் மிக உறுதியாக இருக்கின்றோம். 4ஆம் திகதி 13 பேர் சிறைச்சாலையில் மயக்கமடைந்துள்ளனர். 17 பேர் இரத்தவாந்தி எடுத்துள்ளனர். கூரையில் மயக்கமடைந்த செல்வராசா கஜேந்திரராசா என்பவரை இறக்கி எடுப்பதற்கு சுமார் ஒன்றரை மணி நேரம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பாடுபட்டனர். கூரையில் கைதிகள் சுயநினைவிழந்தால் சிகிச்சையளிப்பது கடினம். எனவே இறுதியாக கூரையில் இருப்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பதை எதிர்வு கூற முடியாதுள்ளது. களுத்துறையிலுள்ள கைதிகளில் 8 பேர் நோயாளிகளாக ஏற்கனவே இருந்ததாலேயே போராட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. கைதிகளில் மனநோயாளி ஒருவரும் போராட்டத்தில் ஈடுபடுகின்றார். அரசு மற்றும் தமிழ்க் கூட்டமைப்பு மலையக தலைவர்கள் பிரதிநிதிகளை நாம் வரவேற்போம். பேச்சுக்கள் நடாத்துவோம். ஆனால் போராட்டத்தைக் கைவிடமாட்டோம். தாய்லாந்துப் பேச்சுக்களில் கலந்துகொள்வதாலேயே நாம் அமைச்சர் மிலிந்த மொறகொடவை விரும்பினோம். அதற்காக அவர் வந்தவுடன் போராட்டத்தைக் கைவிடுவோம் என்றில்லை. எத்தனை தடவைகள் விபரங்கள் திரட்டிவிட்டனர் ?

மேலும் நாம் நடைமுறையிலுள்ள சமாதானத்தைக் குழப்புவதற்கல்ல, சமாதானத்தை அனுபவிக்கவே போராடுகின்றோம். எம்மீது அரசு கருணை காட்டாவிட்டால் மலையகம், வட-கிழக்கு ஸ்தம்பிக்கும் என்றார்கள். ஏன் பொய்சொன்னார்கள்? அவர்கள் உல்லாசமாக வாழ்கின்றார்கள்.

நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்.தமது அரசியல் விளம்பரங்களுக்காக எமது உயிருடன் விளையாடுகின்றார்கள்.

சிறைச்சாலை வைத்தியசாலையிலுள்ள ஆண் தாதியை கடமையில் ஈடுபட வேண்டாம் என நாம் சிறைச்சாலை நிர்வாகத்திடம் கோரியுள்ளோம். ஆனால் நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை. சுகயீனம் அடையும் கைதிகளின் நிலைவரம் குறித்து நிர்வாகம் குறைத்தே தகவல்களை வெளியிட்டு வருவது கவலையளிக்கின்றது.

கொட்டும் மழையிலும் கொழுத்தும் வெயிலிலும் கூரையிலுள்ள சகோதரரை யார் கவனத்திலெடுப்பார். வெகுஜனப் போராட்டங்களை நடத்துமாறு எம்மில் அக்கறை கொண்டவர்களையும் வட-கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களையும் அழைக்கின்றோம்.

"இறுதி மூச்சுள்ளவரை போராடுவோம்!"

நன்றி

*தமிழ் அரசியற் கைதிகள*

# இன்றைய நாள் இனிய நாள்

**06.10.2002.**

| | |
|---|---|
| மேடம் | :- புதிய முயற்சி, வெற்றி,பொருள்வரவு, மனத்தில் உற்சாகம், கல்வி முன்னேற்றம். |
| இடபம் | :- தேகசுகம் பாதிப்படைதல், வைத்தியச்செலவு, அவமானம், மனச்சஞ்சலம், குடும்ப மனஸ்தாபம். |
| மிதுனம் | :- எதிரிகளால் பிரச்சினை, எடுத்தகாரியம் வெற்றி, வீட்டில் செலவு, பொதுவேலையில் திருப்தியின்மை. |
| கர்க்கடகம் | :- வேகத்துடன் செயல்படுவீர், கல்வி முன்னேற்றம், கணவன், மனைவி மகிழ்ச்சி, பணவரவு, கலைநிகழ்ச்சி ரசனை. |
| சிங்கம் | :- பணவரவு மந்தம், கல்வி முன்னேற்றம், பிரயாணத்தடை, வைத்தியச் செலவு, மௌனநிலை. |
| கன்னி | :- அறுசுவை உண்டி, கல்வி முன்னேற்றம், பணவரவு, கலைநிகழ்ச்சியில் ரசனை, அடுத்தவர் விடயங்களில் ஒதுங்கியிருப்பது நன்று. |
| துலாம் | :- பணவரவு, கர்வநிலை, மகிழ்ச்சி, கல்வியில் முன்னேற்றம், இனிய அனுபவம். |
| விருச்சிகம் | :- தொழில் முன்னேற்றம், தெய்வசிந்தனை, பெண்கள் மகிழ்ச்சி, சிநேகித உறவு, வாகனப்பலன். |
| தனு | :- தொழில்சிறப்பு, பிதாவுக்கு உடல்நலக்குறைவு, தூரப்பயணம், வாகன பலன், விருந்தினரால் மகிழ்ச்சி. |
| மகரம் | :- வீட்டிலும் தொழில் ஸ்தானத்திலும் மனஸ்தாபம், மனப்பயம், கல்வியில் ஊக்கம் குறைவு, பணவரவு மந்தம். |
| கும்பம் | :- திடீர்பயம், வயிற்றுக்கோளாறு, பணபரவு, குடும்ப மனஸ்தாபம், கல்வி முன்னேற்றம். |
| மீனம் | :- கௌரவம், சிற்றுண்டி புசித்தல், கல்வி முன்னேற்றம், சுற்றுலா போகும் சிந்தனை, கல்வி முன்னேற்றம். |

யாழ்.கொக்குவில்
இ.சி. இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்பள்ளிகளில் ஆசிரியர் விழா

கிளிநொச்சி, மன்னார் வவுனியா நகரங்களில் இன்று மாபெரும் சர்வதேச ஆசிரியர் தின விழாவினை நடாத்த, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் ஊடாக ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளி வேலைத் திட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தி ஒருங்கிணைக்கப்பெறும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, வடமராட்சி கிழக்கு கல்வி வலயங்களில் இயங்கும் 740 முன்பள்ளிகளின் 950 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு முக்கிய அம்சமாக ஒழுங்கு செய்யப் பெற்றுள்ளது.

அதேவேளை வன்னிப் பெரு நிலப்பரப்பில் ஒவ்வொரு கல்வி வலயத்திலும் 05 என்ற ரீதியில் 25 சிறந்த முன்பள்ளிகளைத் தெரிவு செய்து, அம் முன்பள்ளிகளைச் சிறப்பாக நடாத்துவதில் பங்கு கொண்ட முன்பள்ளி ஆசிரியர்,பெற்றார் சங்கம், நிர்வகிக்கும் நிறுவனம் ஆகியவற்றுக்குச் சிறந்த பரிசில்களையும், முன்பள்ளிகளுக்குப் பாராட்டுப் பத்திரங்களையும் வழங்க ஏற்பாடாகி உள்ளது.

இதேவேளை - செப்ரெம்பர் மாதம 10ம் திகதியில் இருந்து 30ம் திகதி வரை முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையம், கல்விக் கழகம், கல்வித் திணைக்களம் ஆகியவை இணைந்து முன்பள்ளிகளைத் தரிசித்து, தரக் குறிகாட்டிகளைப் பரிசீலித்து, தரம்பிரித்து சிறந்த முன்பள்ளிகளைத் தெரிந்து பரிசில்களை வழங்குவதற்கான பரிந்துரைகளை வழங்கும் நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன.

# புலிகளுடன் ஒத்துப்போக முடியுமானால் ஜனாதிபதி சந்திரிகாவுடன் முடியாதா?

## - ரணில் அரசாங்கத்தைக் கேட்கிறது ஜனாதிபதி செயலகம் -

(கொழும்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ள அரசாங்கம் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட முடியாதா? என ஜனாதிபதி செயலக அறிக்கை கேள்வி எழுப்பியுள்ளது.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து ஜனதாஸ பீரிஸ் கையெழுத்திட்டு விடுத்துள்ள அறிக்கையில் அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடன் நீண்டகாலம் இணைந்து செயற்பட முடியாதென அமைச்சர்கள் கூறிவருவது வியப்புக்குரியது எனத் தெரிவிக்கும் அவ் அறிக்கையில் புலிகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளத்தயாராக இருக்கின்ற அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியுடன் இணங்கிச் செயற்பட முடியாதென்பது அர்த்தமற்றதெனத் தெரிவித்துள்ளது.

மக்களால் தெரிவு தெரிவுசெய்யப்படாத புலிகளுடன் இணைந்து செயற்படும் அரசாங்கம் ஜனாதிபதியுடன் இணங்கிப் போக முடியாதிருப்பதாக கூறுவது ஜனாதிபதியின் புகழுக்கு இழுக்கை ஏற்படுத்துவதாக இருப்பதாகவும் ஜனாதிபதி செயலக அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

# முள்ளியில் விறகு தேடிச் சென்றவர் மிதிவெடியில் சிக்கிக் காலிழந்தார்

(வடமராட்சி)

முள்ளியில் கைவிடப்பட்ட காவலரண் பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கித் தன் இடது காலை இழந்துள்ளார்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் துன்னாலை தெற்கு வேம்படியைச் சேர்ந்த 24 வயதான சிவலிங்கம் சிவாகரன் என்பவரே தனது காலை இழந்தவராவார்.

இடது கால் பாதத்துடன் கீழ் துண்டிக்கப்பட்ட நிலையிலும் வலது காலில் படுகாயமடைந்த நிலையிலும் இவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (23)

# பரந்தன் ஊழியர்க்கு நட்ட ஈ·டு கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான நட்டஈடு வழங்கப்படவுள்ளது. நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற ஊழியர்களுக்கான கலந்துரையாடலில் இது குறித்து அறிவிக்கப்பட்டது

நட்ட ஈடு மற்றும் சேவைக்கால கொடுப்பனவுகள் சுமார் மூன்றரை லட்சத்துக்குட்பட்டதாக ஊழியர்களுக்குக் கிடைக்கும். இது குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள ஊழியர்களுக்கு அறிவிப்பதற்கான கூட்டம் இன்று ஞாயிறு காலை 9.30 மணிக்கு ஆரியகுளப்பகுதியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மின் வழங்க ஏற்பாடு

(வலி.கிழக்கு)

வலி.கிழக்கு பிரதேசத்தில் மின்சாரம் வழங்கப்படாது இருந்த இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

நீர்வேலி, சிறுப்பிட்டி, கரந்தன், புத்தூர், நிலாவரை ஆகிய இடங்களிற்கே மின்சாரம் வழங்கும் பணிகள் நடைபெறுவதாகவும் இதன் முதற்கட்டமாக மின்கம்பங்கள் நடப்பட்டு மின்சார வயர்கள் இழுக்கப்பட்டும் வருகிறது. விரைவில் மின்சாரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (79)

### ஆசிரியர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உலகஆசிரியர் தினவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் ச. சத்தியசீலனும் கௌரவ விருந்தினராக, யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்து கொள்வர். இந்நிகழ்வில் கலைநிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### விபத்தில் ஒருவர் காயம்

(பன்னாலை)

காங்கேசன்துறை வீதியால் வந்த இராணுவவாகனமும் ஏழாலை வீதியால் வந்த மோட்டார் வண்டி ஒன்றும் மல்லாகம் சந்தியில் விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்தில் காயமுற்ற மோட்டார் வண்டிச்சாரதி தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (72)

### அதிபர், ஆசிரியர் கலந்துரையாடல்

(புன்னாலைக்கட்டுவன்)

உடுவில் கோட்டத்தில் உள்ள புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான் பிரதேசங்களில் உள்ள பாடசாலை அதிபர், .ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் யா/ ஏழாலை சைவமகாஜன வித்தியாசாலையில் எதிர்வரும் நாளை திங்கட்கிழமை நண்பகல் 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது

உடுவில் கோட்டத்தில் உள்ள ஏனைய பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் யா/இணுவில் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சகல பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான மாதாந்தக கூட்டம் இம்முறை யாழ்பல்கலைக்கழகத்தில் பதிவாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் பின் 13 பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்கள், உதவி நிதியாளர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (சே)

### கால்நடைகளை கட்டி வளர்க்க அறிவுறுத்தல்

(மீசாலை)

சாவகச்சேரி கமநல சேவை நிலையம் - நெற்செய்கை மேட்டு நிலம் பயிர்ச்செய்கை ஆகியவற்றில் ஈடுபடும் விவசாயிகளின் நன்மை கருதி 6 - 30ம் திகதியான காலப் பகுதியில் கால்நடைகளை கட்டி வளர்க்கும்படி அறித்துள்ளது

# சமுதாயத்தின் எழுச்சிக்கு ஆசிரியர்களே காரணம் !

## அதிபர்கள் சங்கத் தலைவர் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

ஒரு சமுதாயத்தின் எழுச்சிக்கும் ஆக்கத்திற்கும் அடிப்படையாக அமைபவர்களில் முதனிலை பெறுவோர் ஆசிரியர்களேயாவர். எந்தவொரு சமுகம் குருவை, பெற்றோரை, பெரியோரை உரிய கௌரவத்துடன் உயர் நிலையில் வைத்துப் போற்றுகின்றதோ அந்தச் சமூகம் மனிதப் பண்பாட்டில், கலாசாரத்தில், நகரிகத்தில் மகிழ்ச்சிகரமாக வாழ்கின்றது என்பது அர்த்தமாகும் என சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி வடமாகாண அதிபர்கள், சங்கத் தலைவரும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபருமான எஸ்.சேதுராஜா வாழ்த்துச் செய்தி விடுத்துள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில் மேலும தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

வினைத்திறனும் ஒழுக்கசீலமும் கொண்ட சமுதாயத்தை ஆக்குந் திறன் கொண்டவர்கள் ஆசிரியர்களே. இதன் காரணமாகவே கல்விச் சூழல் ஆதிக்கவாதியான வாட்சன் என்பவர் என்னிடம் உடற்குறைபாடற்ற ஒரு தொகை எண்ணிக்கையான பிள்ளைகளை ஒப்படைத்து விடுங்கள். அப்போதே இவர்கள் இனணாராக வேண்டும் என்பதையும் கூறி விடுங்கள். அவர்களை நான் பயன் தரு மேதைகளாகவோ அல்லது பெருங்குற்றவாளிகளாகவோ ஆக்கித் தருகிறேன் என ஆசிரியர் தொழிலின் ஆக்கப்பண்பினை விளக்கினார். ஆசிரியன் என்பதற்கு குற்றமற்றவன் என்பது பொருள். எனவே ஆசிரியர்கள் தமது சமூகப் பொறுப்பு, ஆசிரியத்துவத்தின் பாரம்பரியம், பண்பாடு என்பவற்றை உணர்ந்து தமது தெய்வீகச் சேவையினை ஆற்றுவதுடன் மாணவர்களும் சமூகமும் ஆசிரியர்களை உயர்நிலையில் கொரவித்துப் போசிக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். இன்றைய நன்நாளிலே இதற்கான திடசங்கற்பத்தினை நவனைவரும் எடுத்துக்கொள்வோமாக. ஆசிரியச் சமூகம் அனைத்துச் சிறப்புக்களையும் பெற்றுயர்ந்து மாணவர்களையும் சமூகத்தையும் மேம்படுத்தவேண்டும் என வடமாகாண அதிபர்கள் சங்கம் மனமார வாழ்த்துகின்றது.

# சமாதானப் பேச்சுக்கள் பற்றி மொறகொட சந்திரிகா, கதிர்காமருடன் சந்திப்பு!

(கொழும்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு விளக்கம் அளிக்கும் நோக்கில் அமைச்சர் மிலிந்த மொறகொட அவரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் காலை10 மணிக்கு இடம்பெறுவதற்கு ஏற்பாடாகியிருந்த போதும் நண்பகல் 12 மணியளவிலேயே பேச்சுக்கள் ஆரம்பமாகியது.

இந்தப் பேச்சுக்களின்போது ஜனாதிபதி சந்திரிகாவுடன் லக்ஷ்மன் கதிர்காமரும் உடனிருந்தார்.

தாய்லாந்தில் நடைபெற்ற முதல் சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான முழுமையான விபரங்களையும் மிலிந்த மொறகொட இச்சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகாவிடம் எடுத்து விளக்கினார்.

இதனையடுத்து தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலரும், ஊடகங்களும் வெளியிட்டுவருகின்ற கருத்துக்களால் தனக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்து வருவதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விதிக்கும் வரி அறவீடுகள் குறித்துப் பிரஸ்தாபித்த சந்திரிகா, சமாதானப் பேச்சுக்களுக்கு அது பாதகமாக அமையலாம் என எச்சரித்தார்.

இந்தச் சந்திப்பின் முடிவில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு இரு தரப்பிலும் பிரதிநிதிக் குழுக்களை அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்து பேசுவதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் மிலிந்த மொறகொட, சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதியின் சார்பில் பிரதிநிதி ஒருவரை இடம்பெறச்செய்வது குறித்து பிரதமருடன் கலந்துபேசி முடிவுசெய்வதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி செயலகம் நேற்றுமுன்தினம் மாலை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மிலிந்த மொறகொடவுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையிலான சந்திப்பு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போதுதான் தாய்லாந்து பேச்சுக்கள் தொடர்பான முழுவிடயமும் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப் பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கராத்தே கழக உறுப்பினர்களுக்கு கூட்டம்

(பாண்டியன்தாழ்வு)

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து கராத்தே கழகங்களைச் சேர்ந்தவர்களுக்குமான பொதுக் கூட்டம் ஒன்று இன்று காலை 10.30 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஜெரோம் மண்டபத்தில் இடம்பெறும் என விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இன்பன் அறிவித்துள்ளார்.

இதில் கழகங்களின் பிரதம ஆசிரியர்கள், கறுப்புப்பட்டி பெற்றவர்கள், மற்றும் நலன்விரும்பிகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(65)

## சமாதான ஒளி தென்படும்போது கறைபடியும் வரலாற்றை எழுதாதீர்!

### இராணுவம் மீது தென்மராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி ஒருவரை படைச்சிப்பாய் ஒருவர் துரத்திச்சென்ற சம்பவத்தை தென்மராட்சி தமிழ்மாணவர் ஒன்றியம் கண்டனம் செய்துள்ளது.

இது தொடர்பாக தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தென்மராட்சிக் கிளையினர் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தைச் சேர்ந்த எமது சக மாணவியொருத்தியைப் பாலியல் வல்லுறவு நோக்கில் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய் துரத்திச் சென்ற கொடூர நிகழ்வை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள், துன்புறுத்தல்கள், பாலியல் படுகொலைகள் போன்றவற்றால் ஈழத் தமிழ்மக்கள் படும் துன்பதுயரங்கள் எண்ணிலடங்கா. குறிப்பாகத்தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்பட்டு படுகொலை செய்யப் பட்ட சம்பவங்கள் பல நூறாகும். இதன் ஒருதொடர்ச்சியாகவே கடந்த புதன்கிழமை மட்டுவிலில் நடந்த சம்பவம் அமைந்துள்ளது. சமயோசிதமாக அம்மாணவி நடந்தமையாலும், தெய்வாதீனமாகவும் இன்னொரு ரஜனி இம்மண்ணில் மறைக்கப்படும் வரலாறு நிகழாது தடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு அழிவுகள், இழப்புக்கள், துன்பங்களுக்குப்பின் சமாதான சகவாழ்வுக்கான ஒளிக்கீற்றுத் தென்படும் இவ்வேளையிற்கூட ஸ்ரீலங்கா இராணுவம் தன் குரூர குணத்தை மாற்றத் தயாரில்லை. அது தனது கறைபடிந்த வரலாற்றைத் தொடர்ந்து எழுதவே முயற்சிக்கிறது. இதன்மூலம் அமைதியாகக் கல்வி கற்றுவரும் எம்மை ஆத்திரமூட்ட இராணுவம் முயல்கிறது.

எமது சகமாணவிக்கு ஏற்பட்ட இந்த மிருகத்தனமான முயற்சியை நாம் வனமையாகக் கண்டிக்கிறோம். எம்மாணவர்களை இவ்வாறு கிள்ளுக்கீரையாக இராணுவம் நடத்த முற்பட்டால், நாம் வகுப்பறைகளிலிருந்து வெளியேறிப் போராடத் தயங்கமாட்டோம். இப்போராட்டம் இராணுவத்தை இங்கிருந்து வெளியேற்றும்வரை தொடரக்கூடும் என்பதையும் கூறவிரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சாவகச்சேரியில்

## வெடிக்காத நிலையில் ஷெல்கள் குடிநீரைப் பாவிக்க முடியாதநிலை!

(கச்சாய்)

சாவகச்சேரி பெரியமாவடி, சப்பச்சி மாவடிப் பகுதிகளில் உள்ள காணிகளில் வெடிக்காத நிலையில் ஷெல்கள் மற்றும் வெடி பொருட்கள் காணப்படுகின்றன.

கடந்த யுத்த காலங்களில் இப் பகுதியில் வீழ்ந்த ஷெல்கள் வெடிக்காதநிலையில் காணப்படுவதாகவும் பெரியமாவடியில் குடியிருப்பாளர் ஒருவரது வீட்டுக் கிணற்றிலும் இவ்வாறு ஷெல்கள் காணப்படுவதால் வீட்டுத் தேவைக்கு நீரைப் பயன் படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(33)

## வடபகுதி மக்களின் மனித உரிமை நிலவரம் விரைவில் பாராளுமன்றத்தில் தாக்கலாகும்!

### யாழ். வந்த அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களின் மனித உரிமைகள் நிலவரம் பற்றிய அறிக்கையொன்றை மிகவிரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாக அமைச்சர் சமரசிங்கா தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான தரவுகளைத் திரட்டுவதற்காக அமைச்சர் தலைமையிலான பாராளுமன்றக் குழு கடந்த மூன்றாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு இங்குள்ளோரைச் சந்தித்து தரவுகளைத் திரட்டி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் குழுவில் - அமைச்சர்களான ஜெயலத் ஜெயவர்த்தன, தி.மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், நிலான் பேரெரா, சுசில் பிறேம் ஜெயந்த, ராஜா கொளுறே, கே.கே. ஜெயதாஸ, லக்ஸ்மன் விஜயமான ஆகியோரும் அடங்குவர்.

தாம் திரட்டும் தரவுகளை பாதுகாப்பு, உள்துறை, நீதி அமைச்சர்களுடன் கலந்து உரையாடிய பின்னர் பூரணமான அறிக்கையொன்றைத் தயார்செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

### ஊடகவியலாளரைத் தாக்கிய

## எம்.பியின் சகோதரரை கைதுசெய்ய பிரதமர் பணிப்பு

(கொழும்பு நிருபர்)

பொலனறுவ மாவட்டம் மெதிரிகிரிய பகுதியில் பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரனைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தர விட்டுள்ளார்.

பொலனறுவ மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிட்னி ஜெயரட்ணாவின் சகோதரனையே கைதுசெய்யுமாறு பிரதமர் பொலிஸ் அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

மரக்கடத்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அவரது உறவினர்கள் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம் நடத்தியபோதே சம்பந்தப்பட்டோர்மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலை பட்டமளிப்பு 12ஆம் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 12ஆம் திகதி ஐந்து அமர்வுகளில் நடைபெறவுள்ளது.

இப்பட்டமளிப்பு விழாவில் நேரடி யாகப் பட்டம் பெறுவோருக்கு 7ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதிவரை காலை 9.30 - 12.00 மணிவரையும், மாலை 1.30 - 3.30 மணிவரையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்விக்கிளையில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும்.

பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றுவதற்கான பணம் செலுத்திய பற்றுச் சீட்டினைக் காண்பித்து பின்வரும் திகதிகளில் அங்கிகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 7ஆம் திகதி | 9.30 - 12.00 | முதுதத்துவமாணி, முதுமெய்யியல்மாணி. |
| | 1.30 - 3.30 | மருத்துவமாணி, சத்திரசிகிச்சைமாணி. பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ். |
| 8ஆம் திகதி | 9.30 - 12.00 | நுண்கலைமாணி (இராமநாதன் நுண்கலைக்கழகம் - டிப்புளோமா) |
| | 1.30 - 3.30 | முதுகல்வியியல்மாணி. |
| 9ஆம் திகதி | 9.30 - 12.00 | தொழில் நிர்வாகமாணி, வணிகமாணி. |
| | 1.30 - 3.30 | சித்தமருத்துவ சத்திரசிகிச்சைமாணி. |
| 10ஆம் திகதி | 9.30 - 12.00 | விவசாய விஞ்ஞானமாணி, |
| | 1.30 - 3.30 | விஞ்ஞானமாணி. |
| 11ம் திகதி | 9.30 - 12.00 | கலைமாணி. |
| | 1.30 - 3.30 | வவுனியா வளாகப் பட்டதாரிகள். |

பட்டமளிப்பு விழாவில் புகைப்படம் எடுப்பதற்கான கட்டணமாக ரூபா 35 (போட்டோ ஒன்றிற்கு) பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினையும் சமர்ப்பித்தல் வேண்டும். வரும்போது பல்கலைக்கழக அடையாள அட்டை கொண்டுவருதல் வேண்டும் எனவும் பதிவாளர் கேட்டுள்ளார்.

## க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை டிசெம்பர் 2ஆம் திகதி ஆரம்பம்!

### பரீட்சை ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

இந்தவருடம் நடைபெறவிருக்கும் க.பொ.த. (சா/த) பரீட்சை பெறுபேறுகளுடன் பாடசாலைமட்ட மாணவர் மதிப்பீடுகளும் வெளியிடப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மகிந்த விஜியசிறி தெரிவித்துள்ளார்.

இம்மாணவர்களின் மதிப்பீடுகள் தொடர்பான தகவல்களை வலயக் கல்விப் பணிமனைகள் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தவருடம் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை க.பொ.த. (சா/த) பரீட்சை நடைபெறும் எனவும் இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் அச்சிடும் பணிகள் உள்ளிட்ட ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வருடம் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு 550 000 பரீட்சார்த்திகள் பங்குகொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## படையினர் தங்கியிருந்த காணிக்குள் குப்பை எரித்தபோது குண்டு வெடித்தது!

(சங்கத்தானை)

மீசாலை ஐயா கடையடிப் பகுதியில் காணி ஒன்றைத் துப்பரவு செய்தபோது ஏற்பட்ட குண்டு வெடிப்பு அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. நேற்றுமுன்தினம் மாலை 2 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து அப் பகுதிக்கு வந்த படையினர் விசாரணைகளில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்றுமுன்தினம் மீசாலை ஐயா கடையடிப் பகுதியில் உள்ள காணி ஒன்றைத் துப்பரவு செய்து அங்கிருந்த குப்பைகளை எரித்தபோதே குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. வாகனங்களில் வந்து இறங்கிய படையினர் இது தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டனர். இச்சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் படையினர் முகாம் அமைத்துத் தங்கியிருந்ததாகவும் தெரியவருகிறது. (30-33)

### வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவில்

## வன்னியில் இருந்து மீளக்குடியமர்ந்த 733 குடும்பங்களுக்கு நிதியுதவி கிடைக்கும்

(மல்லாகம்)

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா ரூபா 2,000 வழங்கப் படவுள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வன்னியிலிருந்து வலி - வடக்கு பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த 733 குடும்பங்கள் இந் நிதியுதவி பெறுவதற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இதுவரை பதிவுசெய்யாத ஏனைய குடும்பங்களுக்கான பதிவுகள் வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் இடம் பெற்றுவருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பதிவுகளை மேற்கொண்ட 733 குடும்பங்களின் விபரங்களும் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான நிதியுதவி விரைவில் வழங்கப் படும் எனவும் தெரியவருகிறது.

(68)

## வாழ்வகத்துக்கு அமைச்சர் குழு விஜயம்

(சுன்னாகம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் மகந்த சமரசிங்க மற்றும் இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் நேற்றுமுன்தினம் மருதனார் மடத்தில் உள்ள வாழ்வகத்திற்கு விஜயஞ்செய்தனர்.

அங்கு இவர்கள் விழிப்புலன் வலுவற்ற பிள்ளைகளோடு அளவளாவியதுடன் இல்ல நிர்வாகியிடம் அங்குள்ள வசதியீனங்கள் பற்றியும் கேட்டறிந்தனர். (87)

# அன்றைய ரூஸ்வெல்ற் - சேர்ச்சில் முறையும் இன்றைய புஷ் - பிளயர் முறையும்



இடமிருந்து வலமாக சேர்ச்சில், ரூஸ்வெல்ற், ரஷ்யத் தலைவர் ஸ்டாலின் இரண்டாவது உலகப்போர் காலத்தில் ஒரே நேச அணியில்.

இத்தாலியின் பாஸிஸம், ஜேர்மனியின் நாஸிசம், யப்பானின் இராணுவமயமாக்கல் (இசம்) என்ற இம்மூன்று அரசியல் - இராணுவவியல் கொள்கைத் தொகுப்புக்களின் அமுலாக்கத்தால் இந்த உலகம் பிணிக்கப்பட்டிருந்ததும் இத்தாலி, ஜேர்மனி, யப்பான் ஆகிய நாடுகளின் அன்றைய அரசியல் சக்திகள் இலட்சக்கணக்கில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளுக்கு நேரடி ஏதுக்களாக அமைந்ததும் 1940களிலும் அதற்கு முந்திய தசாப்தங்களிலும் தீவிர உச்சநிலையைத் தொட்ட வரலாற்றுக் கறைகளாகவிருந்தன.

"தத்தமது சொந்த எல்லைகளுக்குள் பாதுகாப்புடன் வசித்தலுக்கான வழிவகைகளைத் தாங்கி, ஏற்றுக் கொள்ளக்கூடியதும் பயப்பீதியிலி



1943 ஜூலை ஒரு படையெடுப்பில் சிசிலியின் லிக்காட்டா கரையோரத்தை நோக்கி தயங்கித் தயங்கிக் கழுதையுடன் கரையேறும் அமெரிக்கச் சிப்பாய்.

ருந்து விடுபட்டு சுதந்திரமாகத் தாங்கள் உயிர்வாழ்க்கையை வாழ்வதற்கான நிச்சயப்படுத்தலை தாங்கி ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான நிறுவப்படக்கூடிய சமாதானத்தைக் காணுவதற்காக" என்ற அடிப்படையில் அத்திலாந்திக் சாசனத்தில் (Atlantic Charter) அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ற் (Roosevelt) அன்றய பிரிட்டிஷ் பிரதமர் சேர்ச்சில் (Churchill) ஆகியோர் 1941ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி தாமிருவரும் தமது கையொப்பங்களை சுபமுகூர்த்தத்தில் இட்டு உலகின் வரலாற்றை மாற்றுவதற்குரிய ஆரம்பத்தை அடிகோலினர்.

அன்றிலிருநது தெளிவாக ஒன்று சேர்ந்த இவ்விரு முதலாளிய ஜனநாயகவாதத்தின் பலம்பொருந்திய ஒருங்கிணைவு பாஸிஸம், நாஸிஸம், யப்பானிய இராணுவமயமாக்கல் (இசம்) ஆகியவற்றுக்கு உச்சந்தலை அடியாக, முதுகெலும்பு முறிப்பாக, நாரிஎலும்பு உடைப்பாக அடிகொடுத்து, இரண்டாம் உலகப் போரை முடித்து மீண்டது உண்மைதான்.

ஆனால் வெறுமனே இவ்விரு நாடுகளின் இந்த சாசனத்தால் இது சாதிக்கப்பட்டதல்ல. 1942 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி ரூஸ்வெல்ற் - சேர்ச்சில் சாசனம். (அத்திலாந்திக் சாசனம்) அதை ஏற்றுக்கொண்ட தெளிவான கூட்டாளி நாடுகளை இனங்காட்டியது.

'ஐக்கிய நாடுகளின் பிரகடனம்' என்ற ரீதியில் கைச்சாத்திடப்பட்டு போருக்குரிய கூட்டணி நாடுகள் அத்திலாந்திக் சாசனத்தையும் முழுமையாக ஏற்றுக்கொண்டன.

ஆனால் மேலே சொன்ன மூன்று 'இசங்களையும்' தோற்கடித்து மீண்டும் இரண்டாம் உலகப்போர் முடிந்த நிலையில், அத்திலாந்திக் சாசனக் கூட்டாளிகளால் 'சோஷலிஸம்' என்ற பெரும் சிந்தனாவாதக் கருத்தியலை வரித்துக்கொண்ட நாடுகளின் முகாம் ஒன்றை நல்ல வெளிச்சத்தில் காண முடிந்தது.

ஜனநாயக முதலாவளித்துவ முகாமும், சமதர்ம சோஷலிஸ முகாமும் உலகின் இறைமையுள்ள நாடுகளின் மத்தியில் தமது சித்தாத்தங்களைப் பரப்புவதற்காக உள்நாட்டுப் போர்களுக்கு நிதியும், போர்க் கருவிகளும் முதலீடு செய்து இன, மத, மொழி, வர்க்க ரீதியான போராட்டங்களை ஊக்குவித்து, விடுதலை, சுதந்திரம், சுயநிர்ணயம், பயங்கரவாதம், தீவிரவாதம் ஆகிய சொற்களை தத்தமது சுயநலன்களின் அடிப்படையில் பிரயோகித்து, உலக நாடுகளின் சிவில் சமுகங்களை 'இரத்தச் சேற்றில்' புதையச்செய்து, இரண்டாம் உலகப்போருக்கு பிந்திய நவீன வரலாற்றைக் கறைபடிய வைத்ததை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல, (சோஷலிஸ சோவியத் முகாமின் 'வழங்கலில்' தங்கிநின்ற பலஸ்தீன விடுதலைப் போரும் அதன் இரத்தக் கண்ணீர் வரலாறும் இன்று யஸீர் அரபாத் என்ற மனிதர் தனது அலுவலகக் கட்டிடத்தை இஸ்ரேலிய புல்டோசர்கள் இடித்துத்தள்ள, ஒரு அறைக்குள் மெழுகுதிரியோடு முற்றுகைப் பட்டு, இஸ்ரேலிய இராணுவம் முற்றுகையை தளர்த்தும் நிலையில் அதுவே 'உன்னத விடுதலை' அதுவே 'பெரு வெற்றி' என்றும் அது அரபாத்தின்



பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர்



அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்

'இராஜதந்திரம்' என்றும் உலகக் கிராமத்தின்(?) ஊடகங்கள் முழங்கி எறிய...... என இக்கதை முரண்களின் புதிராக நீளும்.)

சரிதான் இக்கட்டுரையின் மைய விடயத்துக்கு வரவிருக்கிறோம். அன்றைய ரூஸ்வெல்ற் - சேர்ச்சில் முறையில் அத்திவாரமிடப்பட்ட அத்திலாந்திக் சாசனம் வெற்றியடைந்ததுபோல, விரைவாக ஈராக்கிற்கு எதிரான ஜோர்ஜ் டபிள்யூ புஷ் - ரொனி பிளயர் உறவிலிருந்து உதிக்கும் இராணுவத் தாக்குதல் சார்ந்த தீர்மான வரைபுகள் வெற்றி காண்பதில் ஏன் மந்தமடைகின்றன?

பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகிய 'வீட்டோ' அதிகாரமுள்ள வல்லரசுகளுள் அமெரிக்காவின் தீர்மான வரைபுகளை மும்முரமாக வெளிப்படையாக எதிர்க்கத் தொடங்கியுள்ள நாடு பிரான்ஸ். பிரான்ஸ் காட்டும் எதிர்ப்பின் பரிமாணம் என்ன என்பது பற்றி 'உலக வலத்தில்' முன்னர்ஒரு கட்டுரையில் கூறப்பட்டது. சீனாவின் பரிமாணம் பற்றி யோசித்தால், அமெரிக்கத் தீர்மான வரைபிற்குரிய அதன் எதிர்ப்பு, எதிர்க்கலாசார எதிர்ப்பு என்பதற்கு அப்பால் கனமான இராணுவப் பரிமாணங்களையும் கொண்டது. 'அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் பூதமாக' சீன இராணுவக் கட்டுமாணங்களைப் பார்ப்பதைத் தவிர்க்கமுடியாது. எனினும் பொருளாதார நலன்கள் சார்ந்த ஆழமான காரணிகள் அமெரிக்க - சீனப் போர்பற்றிய சில தீவிர இடதுசாரிகளின் கனவை மிகநீளமான கனவாகவே இழுத்துச் செல்லலாம். ஒரு விடயம்மட்டும் உண்மை. அமெரிக்க இராஜதந்திரம் சீன இராஜதந்திரத்தையும் இராணுவபலத்தையும் போதியளவு மதித்து அனுசரித்தே தனது முடிவுகளை மேற்கொள்ள முனைகிறது.

இங்கு நாங்கள் மிகவும் கவனிக்கத்தக்க விடயம் யாதெனில், ரஷ்ய தலைவர் புட்டீன் தலைமையிலான ரஷ்ய இராஜதந்திரம் மிகவும் நேர்த்தியாக, ரஷ்யாவின் கௌரவத்தைக் காப்பாற்றும் வகையில் செயற்படத்தக்க திறன்வாய்ந்ததாகவுள்ளது என்பதாகும். அவரது தனிப்பட்ட ஆளுமைத்திறன்கள், அனுபவங்கள் ஆற்றல்களோடு இது சம்பந்தப்பட்டது.

**புவியரங்கன்**

பனிப்போர்க் காலம் உச்சநிலையிலிருந்தபொழுது உலக இராணுவப் பரிமாணங்கள், உலக அரசியல் பரிமாணங்கள், உலக பொருளாதாரப் பரிமாணங்கள் பற்றியெல்லாம் மிகக் கூர்மையான அனுபவங்களைப் பெற்ற ஒரு இராணுவ விஞ்ஞானி என்று புட்டின் விபரிக்கப்பட்டவர். அறிதிறனும் தூரநோக்கும் கொண்ட ஒரு தொழில்முறையான புலனாய்வு நிபுணர் அவர்.

குடிகாரரும் முதுமையின் பிடிக்குள் சிக்கியிருந்தவருமான பொறிஸ் ஜெல்சின் காலத்தின் ஊழல் லஞ்சச் சீர்கேடுகளைச் சீராக்கி, ரஷ்ய நிர்வாகத்தை ஸ்திரப்படுத்த முனைந்து செயற்படும் அவருக்கு அமெரிக்கப் பொருளாதார உதவிகள் மிக இன்றியமையாதவையாக உள்ளன.

அதே வேளையில் ஐ.நா. பாதுகாப்புச்சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளான பிரான்ஸ், சீனா ஆகியவற்றைவிட, ரஷ்ய அரசு ஈராக் அரசுடன் மிக நெருங்கிய பொருளாதாரத் தொடர்புகளைப் பேணிவருகிறது. ரஷ்யாவின் துணையுடன், ஐ.நாவின் பொருளாதாரத் தடையால் சரிந்திருந்த ஈராக்கியப் பொருளாதாரத்தை மீட்பதற்கு ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனால் ஓரளவு இயலக்கூடியதாக இருந்திருக்கலாம்.

வளைகுடாவில் 'பாலைவன நரி' என்ற இராணுவ நடவடிக்கையை அமெரிக்கா தலைமைதாங்கி நடத்தி முடித்த பிறகு, ஈராக்குடன் தொடர்ந்தும் இராஜதந்திர ரீதியில் ஒத்துழைத்த நாடு ரஷ்யா. ரஷ்யநாட்டு அதிகாரிகள், எந்த நாட்டு அதிகாரிகளைக் காட்டிலும் ஈராக்குக்கு அடிக்கடி விஜயம் செய்பவர்களாகவுள்ளனர். 'உணவுக்கு எண்ணெய்' (Oil For Food) என்ற ஐ.நாவின் திட்டத்தின்படி ஈராக் எண்ணெய் விற்க வேண்டும் என்ற கடும் அமுலாக்கம் அமெரிக்கா, பிரிட்டனால் கண்காணிக்கப்பட்டபோது 'வேறு தேவைகளுக்கும் எண்ணெய்' (Oil For Other needs) என்ற செயற்பாட்டை இரகசியமாக ரஷ்யா நகர்த்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

அவ்வகையில் ரஷ்யா மிக நட்புறவாக ஈராக்குடன் செயற்பட்டமையை பெரிது படுத்தாதுபோல காட்டிக் கொண்டு தனது தீர்மானங்களுக்கு ஒத்துப்போகும்படி அமெரிக்க இராஜதந்திரிகள் அமெரிக்க வெளியுறவு அமைச்சரிடம் விநயமாக கேட்டிருந்தனர். ஆனால் பலனில்லை. இப்பொழுது நேரடி விஜயங்களைத் தவிர்த்து அமெரிக்க இராஜதந்திரிகளால் தொலைபேசி மூலமான இராஜதந்திரம் (Telephone Diplomacy) ரஷ்யாவை நோக்கி மேற்கொள்ளப்படுகிறது.

இவ்விடயம் பற்றி தீவிர இடதுசாரித்தன்மை கொண்டதாக ரஷ்ய மக்கள் சொல்லிக்கொள்ளும் ரஷ்ய சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த

**உலகவலம்**

முதிர்ந்த பிரமுகர் ஒருவர் மேற்கு ஐரோப்பிய ஊடகமொன்றுக்கு வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்தார். விரும்பியோ விரும்பாமலோ ரஷ்யா தனது பொருளாதாரத் தொடர்புகளை ஈராக்குடன் பேணி வந்தது. அதனால் ஈராக்கின் பொருளாதாரக் கட்டுமாணங்கள் அமெரிக்க இராணுவத் தாக்குதல்களில் சிதைந்தால் அது ரஷ்யாவிற்கு கவலையும் விசனமும் தரும் விடயமாகும் என்று அந்த சோசலிஸ்ட் பிரமுகர் கூறினார்.

அத்துடன் மறுபக்கத்தில் ரஷ்யப் பொருளாதார வர்த்தக நலன்களில் அமெரிக்கச் செல்வாக்கும் இன்றியமையாதது என்பது கண்கூடு.

இந்நிலையில் ஈராக் அதிபர் சதாமிடம், ஆயுதப் பரிசோதனை விடயத்தில் உரிய ஒத்துழைப்புக்களை நல்கி, அமெரிக்காவின் போருக்கான கோரிக்கைகளை வலுவிழக்கச் செய்யும்படி சதாமுக்கு ரஷ்யா ஆலோசனை சொல்கிறது. அத்துடன் இராணுவப் பிரயோகம் செய்வதற்கு அனுமதிக்கும் தீர்மானத்தை எடுக்கவேண்டிய உடனடியான தேவை இப்பொழுது இல்லை என்றும் ரஷ்யா அமெரிக்காவுக்கு அடித்துக் கூறியுள்ளது.

முதலில் மிகத்தீவிரமாக அரசியல் இராஜதந்திர ரீதியாக அணுகி, ஈராக் விவகாரத்தை ஒரு இடைக் காலத்துக்குத் தானும் சமரசத்தீர்வுக்கு இட்டுச்செல்லவே ரஷ்யா விரும்புகிறது.

அதாவது ஈராக் விவகாரத்தை



கடந்த வளைகுடா யுத்தத்தின்போது தன் மழலையிடம் போருக்குப் போவதற்கு விடைபெறும் அமெரிக்கப் போர்வீரன்

அமெரிக்கா கையாளும் விதத்தை எதிர்க்கின்ற பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை யாதெனில் மூன்று நாடுகளும் ஏதோவொரு வகையில் தமது பொருளாதார வர்த்தக நலன்களைப் பேணுவது என்ற அடிப்படையில் அமெரிக்காவை 'மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்' ஏற்றுத்தான் ஆகவேண்டியகட்டத்தில் உள்ளன.

இராணுவ ரீதியாக உணர்வுபூர்வமாகச் சிந்தித்து சடுதியாக முடிவுகளை எடுக்கக் கூடிய முசோலினி, ஹிட்லர் போன்ற அரசியல் தலைவர்களின் உருவாக்கத்தைப்பற்றி யாரும் இப்பொழுது பிரஸ்தாபிப்பதில்லை. ஏனெனில் அணுவாயுத வல்லமையுள்ள அரசுகளாக 'வீட்டோ' அதிகாரமுள்ள அரசுகளே திகழ்கின்றன என்பதுகூட மாறிவிட்டது.

இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல்(?), வடகொரியா (?), ஈராக்(?) என்பனவும், நினைத்த மாத்திரத்தில் அணுவாயுதத்தை வைத்திருக்கக் கூடிய தொழில்நுட்பத்தை யப்பானும் கொண்டிருக்கின்றன. இதனால் ஏற்பட்ட இராணுவச் சமநிலை ஒருபுறமும் உலகப் பொருளாதார வர்த்தகச் சந்தை சாரந்த தாராளப் பொருளாதாரக் கொள்கைகளும் நவீன தொலைத் தொடர்பு வலை வசதிகள் ஒருபுறமும் என உலகின் எல்லோரும் எல்லோரிலும் ஏதோ ஒரு வகையில் தங்கியிருக்கின்றனர்.

அன்றைய பாஸிஸ்ட்டுக்கள், நாஸிகள், யப்பானின் இராணுவமயப்படுத்தல்வாதிகள் ஆகியவற்றுக்கு



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின்

எச்சரிக்கையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் துணிந்து ரூஸ்வெல்ற் - சேர்ச்சில் முறையை ஏற்றுக்கொண்ட உலக நாடுகள், இன்றைய புஷ் - பிளயர் முறையை உடனடியாக ஏற்றுக்கொண்டு, ஈராக்குக்கு எதிராகத் தாக்குதல் நடாத்துவதற்கு, ஐ.நா. ஊடான தீர்மானத்திற்கு வழிவகுக்க மறுப்போ தயக்கமோ காட்டிவருகின்றன.

முதலாம் உலகப்போருக்கும் இரண்டாம் உலகப்போருக்கும இடைப்பட்ட உலக ஒழுங்கிலிருந்து, இரண்டாம் உலகப்போருக்கும் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கும் இடையிலான உலக ஒழுங்கு முற்றிலும் வேறுபட்டிருந்தது.

சோவியத்தின் வீழ்சிக்கும் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம திகதிக்கும் இடைப்பட்ட உலக ஒழுங்கிற்கும், அந்த செப்ரெம்பர் 11 ஆம் திகதிக்குப் பிந்திய உலக ஒழுங்குக்கும் இடையிலான மாற்றங்கள் நிகழத்தொடங்கி உள்ளன.

உண்மையில் நியூயோர்க்கில் நிகழ்ந்த அந்தப்பயங்கரம் (அப்பாவிகளைக் கொன்றொழித்த தாக்குதல் என்பதால் பயங்கரவாதம் என்றும் கூறப்படவேண்டும்) உலக சிவில் சமூகங்களைக் கிலேசப்படுத்தித் திகைக்கவைத்தது. துறைசார்ந்த இராணுவவியலாளர்களும் அதிர்ந்தனர்.

பெரிய நாடுகளின் அரசாங்கங்கள் தத்தமது சுயபாதுகாப்புத் திட்டங்களுடன் தேவைக்குரிய வலிந்து தாக்கும் திறனைப்பேணுவதுடன் நின்றுவிடும் அளவுக்கு உலக சிவில் சமூகங்கள் மத்தியில் போரை வெறுக்கும் உணர்வுகள் கிளம்பியிருக்கின்றன. தமது வலிந்துதாக்கும் திறனைப் பிரயோகித்தல் தமது எதிரிகளை மேலும் மூர்க்கப்படுத்தி பின்விளைவுகளை யிட்டுச் சிந்தியாமல் முடிவுகளை எடுக்கத் தூண்டிவிடலாம் என்று சிவில் சமூகங்களைச் சார்ந்த 'மிதவாதிகள்' பயப்படத் தொடங்கியுள்ளனர்.

தத்துமது அரசியல் பொருளாதார இராணுவ உபாயங்களோடு சிவில் சமூகங்களின் எண்ணப்போக்கையும் மதிக்கும் நிலையை செப்ரெம்பர் 11 ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ளது. இந்தநிலையின் முதற் கூறை அமெரிக்காவும் பிரிட்டனும் ஏற்றுள்ளன. ஆனால் இரண்டாவது கூறைச் சிந்திக்கமுடியாத அளவுக்கு அவற்றின் மூல உபாயங்கள் உள்ளன.

ஆகவே, ரூஸ்வெல்ற் - சேர்ச்சில் முறையை அன்று உலகம் ஏற்றுக் கொண்டதுபோல, புஷ்-பிளயர் முறையை இன்று உலகம் ஏற்றுக் கொள்ளாதுபோலத் தெரிகிறது. அல்லது ஏற்றுக்கொள்வதில் தாமதங்களும், தயக்கங்களும் நிலவும். ☆

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

## எமது உலகம் எல்லைகள் அற்றது!

விளையாட்டுத்துறை சார்ந்த அனைவருக்கும் வணக்கம். 'நமது ஈழநாடு' ஞாயிறு தோறும் வெளிவரும் 'விளையாட்டு அரங்கு' மூலம் உங்களுடன் உறவுப்பாலத்தை ஏற்படுத்த ஆர்வம் கொண்டுள்ளது. எமது மண்ணின் மற்றும் தேசிய, சர்வதேச ரீதியில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்வதுடன், நமது சகோதர சகோதரிகளின் விளையாட்டு ஆர்வத்திற்கு ஒரு உத்வேகத்தைக் கொடுக்கவும் முனைகிறது. அவலம் நிறைந்த ஒரு வாழ்நிலை, அதிகார அடக்கு முறைகளில்கூட தளராத, குறைந்த வாய்ப்புக்களை மட்டும் கொண்டிருந்தும் நிறைந்த வீச்சைக் காட்டியவர்கள் எம் வீரர்கள். இப்பொழுது சிறிய ஒளிக்கீற்றுத் தென்படும் வேளையில் அவர்களை மேலும் மெருகூட்ட 'விளையாட்டரங்கு' முனையும் அது எமது கடமையும்கூட. சரியான சந்தர்ப்பம் அமையின் எமது வீரர், வீராங்கனைகள் எவ்வாறு ஒளிர்வார்கள் என்பதற்கு சமகால நிகழ்வுகள் துலாம்பரமான உதாரணங்களாக அமைகின்றன. சாதனைபுரியும் வீரர்களை எமக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களை நாம் உற்சாகப்படுத்த முடியும். எனவே ஆர்வமுள்ளவர்கள் எமக்கு எழுதுங்கள். உங்கள் கருத்துக்கள் ஆரோக்கியம் உள்ளவையாக இருக்கட்டும். நிறைவுகளை இனங்கண்டு எழுதுங்கள். பல்வேறு துறைகளை எவ்வாறு மெருகூட்டலாம் என்பதை எடுத்துக்கூறுங்கள். உங்கள் கருத்துக்களுக்கு நீங்களே உரிமையுடையவர்கள் என்ற பலத்தின் அடிப்படையில் எழுதுங்கள். இது எம்மண்ணின் விளையாட்டுத்துறையை நிறையவே வளர்க்க உதவும்.

மாவட்ட, மாகாண, தேசிய அளவில் வீச்சினைக் காட்டக் கூடியவர்கள் நிறையவே இருக்கிறீர்கள். உங்களைப் பற்றிய விபரங்களுடன் தொடர்புகொள்ளுங்கள். உங்களை 'நமது ஈழநாடு' ஊக்குவிக்கும். பள்ளிச்சிறார்கள் எப்பொழுதும் முதன்மையானவர்கள் அல்லவா? அவர்களுக்கு, அவர்தம் சாதனைகளுக்கு என்றுமே முன்னுரிமை கொடுப்பது மிகவும் நியாயம் அல்லவா. தொடர்புடையவர்கள் அவர்கள் பற்றிய விபரங்களை எமக்குத் தாருங்கள். தொடர்புகளை ஏற்படுத்த உதவுங்கள். மாணவப் பருவத்தின் ஆளுமை வளர்ச்சியுடன் விளையாட்டுக்கள் இணைந்தே செல்வது கண்கூடான உண்மையல்லவா. எம் மாணவச் செல்வங்களின் திறமைகளை எல்லோரும் அறிந்து கொள்வோம். அதற்கு எம்மால் இயன்ற அனைத்தையும் நாம் செய்வோம்.

விளையாட்டுக்கள் கௌரவம் நிறைந்தவை. மனித மேம்பாட்டுக்கு உதவுபவை. மேலும் எம்மண்ணின் பெருமையையும் எடுத்துக் கூறுவன. எனவே நாம் அவற்றை வளர்த்தெடுக்க எம்மால் ஆனவற்றைச் செய்வோம். உங்களுடன் தோளோடு தோள் நின்று இவற்றுக்காக நாம் உழைப்போம் என்பதைத் தெளிவாக இவ்வேளையில் எடுத்துரைக்கிறோம். நாம் எல்லோரும் ஒன்றிணைந்து இனி தொடர்ந்து செல்வோமா?

*நன்றி*

*- நிர்மலன்-*





## 'ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஆர்வமும், ஆதங்கமும்'

பதினான்காவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இரண்டாவது, மூன்றாவது இடங்களைக் கைப்பற்ற போகிறவர்கள் யார் என்பதுதான் எதிர்பார்க்கை. இது என்ன விந்தை என்று ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமானவர்கள் ஆச்சரியப்படமாட்டார்கள். ஏனெனில் உலகிலேயே அதிகூடிய சனத்தொகை கொண்ட சீனா மற்றெந்த நாடும் நெருங்க முடியாதபடி பெருத்த இடைவெளியில் ஆசிய விளையாட்டுப் போட்டிக்களில் முதலாம் இடத்தைப் பெறும் என்பது இப்பொழுதே எல்லோருக்கும் தெரிந்த விடயமாகி விட்டது.

ஏறத்தாழ பத்தாயிரம்பேர் பங்கு கொள்ளும், ஆசியாவின் முதன் நிலைப் போட்டியான ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கங்கள் மட்டும் 419 வெற்றிகொள்ளப்பட வேண்டும். இதில் 150க்கு மேற்பட்ட தங்கப்பதக்கங்களைச் சீனா தட்டிச்செல்லும் என்பது எதிர்பார்க்கை. 'நூறு தங்கப்பதக்கங்கள் பெறுவதென்பது இலகுவானது. ஆனால் இது எமது இலக்கின் ஒரு பகுதியே என்றார்' சீனக்குழுவின் தலைவர் ஹிஹியூசியான். அவருடைய இலக்கு 2008 இல் நடைபெறப்போகும் சீன ஒலிம்பிக் போட்டியாகும். அதற்கான தயாரிப்பு வேலைகளே இப்போது நடைபெறுகின்றன என்றால் சீனா





ஆசிய விளையாட்டுப் போட்டியில் நீச்சலில் உலக சாதனை படைத்த கொசுகே முதற்படத்திலும், பளுதூக்கும் போட்டியில் வெற்றியீட்டிய லீமோசெங் இரண்டாவது படத்திலும் காணப்படுகிறன்றனர்.

வின் திட்டமிடல் எப்படி அமைந்திருக்கும் என்பதை வியப்புடன் தான் நோக்க வேண்டும். 1994இல் 135 தங்கப்பதக்கங்கள், 1998இல் 129 தங்கப்பதக்கங்கள், இம்முறையும் முதல் நிலைபெறும் என்ற நம்பிக்கை. இருந்தும் பங்கு கொள்ளும் அங்கத்தவர்கள் தொகையென்ற வரிசையில் சீனா மூன்றாம் இடத்திலேயே இருக்கிறது. சீனாவில் இருந்து சென்றுள்ள குழுவில் 689 விளையாட்டு வீரர்கள் பங்குகொள்கின்றார்கள்.

இந்நிலையில் இரண்டாம் மூன்றாம் இடங்களைப்பெறப் போகின்றவர்கள் யப்பானா அல்லது கொரியாவா என்பதே வினாவாக இருக்கும். 1986 சியோல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலேயே முதன் முறையாக கொரியா 93 தங்கங்கள் வென்று யப்பானை மேவிநின்றது. பீஜிங் போட்டிகளில் இரண்டாம் நிலையைத் தக்கவைத்த தென் கொரியா 1994இல் யப்பானிடம் அந்த நிலையைப் பறிகொடுத்தது. 1998இல் மீண்டும் யப்பானை மூன்றாவது இடத்துக்குத் தள்ளிய கொரியா இரண்டாம் இடத்திற்கு முன்னேறியது. இம்முறை ஆசிய விளையாட்டுக்களை நடாத்தும் தென்கொரியா நிச்சயம் இரண் டாம் இடத்தைப் பெறமுடியும் என்பதைப் பூரணமாக நம்புகின்றது.

யப்பான் ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுப்பியிருக்கும் குழு எண்ணிக்கையில் இரண்டாமிடம் பெறுகின்றது. முதல் மூன்று இடங்களையும் பெறும் நாடுகள் என்ற வகையில் தடகளப் போட்டிகள், நீச்சல் போன்றவற்றில் தென் கொரியாவை விட சீனாவும் யப்பானும் முன்னணியில் நிற்கும் என்பதைக் கடந்தகால விளையாட்டுப் போட்டிகள் காட்டி நிற்கின்றன.

அரசியல் முரண்பாடுகள் நிறைந்த வட, தென் கொரிய நாடுகள் ஆரம்ப நிகழ்வின்போது ஒரேயணியாகக் கைகோர்த்து வந்தது கிழக்காசியாவின் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றாகவே நோக்கப்படுகின்றது. மேலும் தென்கொரியாவில் நடைபெறும் சர்வதேச நிலைப்போட்டிகளில் வட கொரியா பங்கு பற்றுவதென்ப தும் இதுவே முதல் முறையாகும்.

நமது அண்டை நாடான இந்தியா உலகின் இரண்டாவதான கூடிய சனத்தொகை கொண்ட நாடு. 356 வீரர்களை 14ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுப்பியுள்ளது. இருந்தும் முதன்மைநிலை வசிக்கப்போவது என்னவோ கிழக்காசியாவைச் சார்ந்த நாடுகளாகத் தான் இருக்கப்போகின்றன.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் முதன்முதலாக பங்குகொள்ளும் ஒரு நாடும் உண்டு. அதுதான் இந்தோனேசியாவில் இருந்து பிரிந்து சுதந்திர நாடாகத் திகழும் கிழக்குத் தீமோர். பதினைந்து வீரர்கள் கிழக்குத்தீமோர் அணியில் பங்குகொள்கின்றார்கள்.

இன்னொரு மகிழ்வான செய்தி தான் ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன் இறுதியாக ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட ஆப்கானிஸ்தான் புதிய அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் இம்முறை

**நிர்மலன்**

போட்டிகளில் பங்கு கொள்வதாகும்.

இதேவேளை 1990இல் குவைத் நாட்டின் மீது படையெடுத்த ஈராக் அன்றிலிருந்து இந்தப்போட்டி வரை நான்கு போட்டிகளிலும் கலந்து கொள்ளவில்லை. இதற்கும் காரணமாக அமைவது அரசியல் தவிர வேறொன்றும் இல்லை.

விளையாட்டுத்துறை சகல தடைகளையும் கடந்தது. எல்லைகள் அற்றது. முழு உலகையும் ஒன்றிணைப்பது என்று எல்லோரும் கூறுகின்றார்கள். ஆனால் ஏதோ ஒரு காரணம் தனிமனிதனின் விளையாட்டுத்திறமையைச் சர்வதேச அளவில் வெளிப்படுத்தத் தடையாக இருப்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இது உலகளாவிய ரீதியில் மனித உரிமை மீறல் இல்லையா? தத்தம் அரசுகள் மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையில், வேறுநாடுகளின் அழுத்தத்தின் அடிப்படையில் அல்லது குறிப்பிட்ட ஒரு நாட்டில் சென்று விளையாட மற்றைய நாட்டு அணி அச்சப்படும் நிலையில் விளையாட்டுத்துறையின் உண்மையான எதிர்பார்க்கை நிறைவேற்றப்படுவதில், தனிமனிதனின் திறமை வெளிப்படுத்தப்படும் மன நிறைவில் ஏற்படும் தடங்கலில் விளையாட்டை நேசிப்பவர்கள் மன ஆதங்கம் கொள்வதில் நிறையவே நியாயம் இருக்கிறதல்லவா.

விளையாட்டுத்துறை இனமத சமய, வேறும் ஏதும் பேதங்கள் இருப்பின் எல்லாவற்றையும் கடந்து மனித

(7ஆம் பக்கம் பார்க்க)

## வளரும் பயிரை வளர்க்க முயல்வோம்!

எமது பாரம்பரிய விளையாட்டுக்களில் தற்போது பலரது கவனத்தையும் ஈர்த்துவரும் விளையாட்டு என்ற வகையில் தாச்சி விளையாட்டுப் பற்றியும் அதனுடன் இணைந்த பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அறிந்து கொள்ள யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத் தலைவரும், கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக உபதலைவருமான செ.சண்முகலிங்கம் அவர்களை அணுகினோம்.



செ.சண்முகலிங்கம்

உத்தியோகபூர்வமாக 1993 இல் அமைக்கப்பட்ட யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கம் 1995 இடம்பெயர்வு வரை வட்டவை, மாவட்ட அவை ரீதியில் பல அனுபவமிக்க மத்தியஸ்தர்களினதும் உதவியுடன் இளைஞர்களினது பங்களிப்புடன் கூடிய கட்டுக்கோப்புடன் அமைந்த விளையாட்டுச் சுற்றுப்போட்டிகளை நடாத்தியதை நினைவு கூருகின்றார். 1996 இல் மீளக்குடியமர்ந்த பின் பல்வேறு கெடுபிடிகளால் சீராகச் செயற்பட முடியாவிட்டாலும், 1997 இல் இருந்து முழுவீச்சுடன் சங்கம் செயற்பட ஆரம்பித்தது என்கிறார்.

கூடுதலாகக் கிராமப்புறங்களிலும், அன்றாடம் உழைக்கும் மக்கள் மத்தியிலும் பிரபல்யம் பெற்றிருக்கும் கிளித்தட்டு மறித்தல் என்று அழைக்கப்படும் தாச்சி விளையாட்டு, எவ்வித செலவும் இல்லாத, ஒரு விளையாட்டாகக் காணப்படும் சிறப்பைச் சுட்டிக் காட்டுகின்றார். தாச்சி விளையாட்டின் இன்னொரு சிறப்பம்சம் வருடம் முழுவதும் - மாரி காலத்தில்கூட கிடைக்கும் இடைவெளியில் - சுற்றுப் போட்டிகள் நடைபெறுவதென்பதைச் சுட்டிக்காட்டும் அவர் கழகங்கள் அனைத்தும் புரிந்துணர்வுடன் கால எல்லைகளைப் பிரித்துக்கொண்டு சுற்றுப் போட்டிகள் நடைபெற ஒத்துழைப்பதை நன்றியுடன் குறிப்பிடுகிறார்.

தாச்சிப் போட்டிகளின் வளர்ச்சி எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அவரிடம் வினவினோம். 'முன்பெல்லாம் குறிப்பிட்ட ஒரு சில அணிகளே நடைபெறும் எல்லாச் சுற்றுப் போட்டிகளிலும் இறுதிப் போட்டியில் வெற்றிபெறும். ஆனால் இன்று நிலைமை மாறிக் கொண்டு வருகின்றது. எந்த அணிவெல்லும் என்று கூற முடியாத அளவிற்கு வேகமாக அணிகள் உயர்திறமை பெறுகின்றன. புதிதாக இணையும் அணிகள் கூட மிகப் பலமானவையாக இருக்கின்றன என்று சிறப்பான உதாரணம் ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறார். இதற்குக் காரணம் வேகமான வளர்ச்சி, விளையாட்டின் மீது கொண்ட ஆர்வம், விளையாட்டுப் பரவலாக்கம் பெற்றுவரும் பாங்கு என்பவற்றோடு கட்டுக்கோப்புக்குட்பட்ட தன்மை என்பதையும் அவர் கூற அனேகமான தாச்சிப் போட்டிகள் குழப்பத்தில் முடிவடைவதையும், சில சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் பிரச்சினைகளின் காரணமாக நீண்ட நாட்கள் பின்போடப்படுவதையும் ஆதங்கத்துடன் சுட்டிக் காட்டினோம். சிறிது நிதானித்த அவர் அனேகமான போட்டிகள் உணர்ச்சிவசப்பட்ட ரசிகர்களின் அத்துமீறல்களால்தான் அந்நிலையடைகின்றன என்பதைக்

**பிரகாசன்**

குறிப்பிட்டு, முன்னணிக் கழகங்கள் தோல்வியைச் சந்திக்கும் தருணங்களில் குழப்புவதன் மூலம் இன்னொரு சந்தர்ப்பத்தைசப் (Replay) பெறலாம் என்ற நோக்கில் சில சந்தர்ப்பங்களில் நடந்து கொண்டுள்ளன என்பதை ஏற்கும் அவர் இதனைப் பொதுமைப்படுத்திவிடக்கூடாது இவை ஆங்காங்கே நடைபெறும் சின்னச் சம்பவங்கள்தான் என்கிறார்.

பள்ளிச்சிறார்களின் பங்களிப்புப் பற்றிய கருத்துப் பரிமாறலின்போது 13 வயதிற்குட்பட்டோருக்கான தாச்சிப் போட்டிகளைக் கல்வித்துறைசார்ந்தோர் நடாத்திவருவதாகவும், இதுவே 17 மற்றும், 19 வயதிற்குட்பட்டோருக்கான போட்டிகளாயும் வளர்ச்சியடையுமாயின் பல்வேறு தரப்பாடசாலைகளும் பங்குபற்றுவதோடு, நகரப்புறத்திலும் தாச்சி விளையாட்டு வேகமாக பிரபல்யமாக வாய்ப்பு ஏற்படும் என்றும், வளர்ச்சி வேகம் இன்னும் அதிகமாகும் என்றும் கூறும் அவர் மேற்படி கருத்தைச் சம்பந்தப்பட்டோர் பரிசீலிப்பர் என்ற நம்பிக்கை தனக்குண்டு என்று கூறுகிறார். இது தொடர்பில் தாச்சிச் சங்கமும் அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது என்கிறார்.

தாச்சிப் போட்டிகள் நடாத்துவது, நிறுவனம் போன்ற விடயங்களையும் பற்றிக் குறிப்பிடும் போது, எதுவித தயக்கமும் இன்றி இலங்கை வங்கி, வர்த்தகவங்கி இரண்டும் அனுசரணையாளர்களாக ஆரம்பத்தில் இருந்தே இருந்து வருவதையும் அவர்களின் இந்தப் பணி பாரம்பரிய விளையாட்டு என்ற வகையில் மட்டுமல்ல வசதி குறைந்தவர்களின் மகிழ்ச்சியில் பங்கு கொள்வது என்ற வகையிலும்

(7ஆம் பக்கம் பார்க்க)

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# சர்ச்சையில் தொடங்கி சலிப்புடன் முடிந்த சுற்றுப்போட்டி

ஐ.சீ.சீ வெற்றிக்கிண்ணப் போட்டிகள் முடிவடைந்து விட்டன. முன்பே திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்வாக இது இருந்தபோதும் இறுதி நேரத்தில் ஏற்பட்ட சில சர்ச்சைகளால் திட்டமிட்டபடி சர்வதேச முதற்தர அணிகள் கலந்து




கொள்ளுமா என்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டதைத் தவிர்க்க இயலவில்லை. சர்வதேச விளையாட்டுக்கள், விளம்பரங்கள் அது தொடர்பில் பெருந்தொகைப் பணம் புரளல் என்ற வகையில் ஐ.சீ.சீ. நிபந்தனைகளுக்குப் பணிய மறுத்தன சர்வதேச அணிகள். இருந்தும் பல்வேறு காரணங்களின் பின்னணியில் எல்லா நாடகளும் ஐ.சீ.சீ யுடன் ஒத்துப்போக இந்திய அணியின் மூத்த சில வீரர்கள் விடாப்பிடியாகவே நின்றதனால் பிரச்சினை இந்தியாவுக்குள்ளேயே முற்றிவிட்டது. மேலும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முதற்தர அணிக்குப் பதிலாக இரண்டாம் நிலை அணியொன்றை ஹொன்சிங் தலைமையில் அனுப்பவும் முடிவெடுத்தது. என்னும் ஐ.சீ.சீ உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட இந்திய வீரர்களை நேரடியாகச் சந்தித்ததன் மூலம் சில இணக்கங்கள் காணப்பட்டு இந்திய முதற்தர அணியே இலங்கையில் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டது. ஆக இலங்கை ரசிகர்கள் ஏமாற்றமுறாமல் சர்வதேச அணிகள் சகலவற்றையும் காணும் வாய்ப்புப் பெற்றதுடன் இலங்கையும் சர்வதேசப் போட்டியொன்றைச் சோடை போகாமல் நடத்தும் வாய்ப்பையும் பெற்றது.

இதனைத் தொடர்ந்து கிரிக்கெட் விளையாட்டைப் பொறுத்து பந்தயப் பணம் கட்டல் தொடர்பாக சர்வதேச ரீதியில் இன்று ஏற்பட்டுள்ள சர்ச்சை மறைமுகமாக வீரர்களைப் பாதிக்கும் நிலை உருவாயிற்று. சகல கிரிக்கெட் வீரர்களும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டமை, அவர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டமை, அவர்கள் அறியாமல் கமராக்கள் அவர்களைப் பின்தொடர்ந்தமை என்றவாறு தொடர்ந்து செல்ல கிரிக்கெட் வீரர்கள் 'கிரிமினல்கள்' போல நடாத்தப்படுகிறார்கள் என்ற கண்டனம் எழுந்தது. மறுபுறம் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சில உறுப்பினர்கள் மற்றும் இன்றைய முன்னாள் வீரர்கள் சிலர் ஐ.சீ.சீ உத்தியோகத்தரின் 'திமிர்' நிறைந்த நடவடிக்கைகளையிட்டு அதிருப்தி வெளியிட்டுள்ளனர். ஒரு சிரேஷ்ட கிரிக்கெட் முகாமையாளர் கருத்துக் கூறும் போது, நாம் எத்தனை பேர் அனுமதிக்கப்படுவோம், நாம் எங்கிருந்து ஆட்டத்தைப் பார்க்க வேண்டும், எமது வாகனத்தை எந்தத் தரிப்பிடத்தில் நிறுத்த வேண்டும் என்பதையெல்லாம் கூட வெளிநாட்டவர் எமக்கு உத்தரவிடும் நிலைதான் காணப்படுகிறது. இதுகூட ஏகாதிபத்தியத்தின் எச்சசொச்சம்தான் என்று ஆதங்கப்பட்டுக்கொண்டார்.

இப்படியாக எவ்வளவோ தெரிந்தும் தெரியாத அதிருப்திகள், கருத்து வேறுபாடுகள் எல்லாவற்றையும் தாண்டி ஐ.சீ.சீ. வெற்றிக்கிண்ணப் போட்டிகள் நிறைவுற்றன. கசப்பாக இருந்தாலும் ஒன்றை ஒப்புக் கொள்ளவேண்டும். சில வேளைகளின் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் இறுதி ஆட்டம் சோபிக்காமல் போய்விட இடைநடுவே விளையாடப்பட்ட ஏதாவது ஒன்றிரண்டு போட்டிகள் ரசிகர்களின் எதிர் பார்ப்புக்கு மேலாகவே அம்சமாக அமைந்து விடுவதுண்டு. ஐ.சீ.சீ. வெற்றிக் கிண்ணப்போட்டிகளிலும் இதுவே நடைபெற்றது. மேலும் இறுதியாட்டம் இரண்டு நாட்களுக்கு நீட்டப்பட்டும்கூட, வெறும் சப்பென்று போய்விட்டமை துரதிர்ஷ்டம். அதுவும் அரைகுறையாகவே ஆட்டம் நிறுத்தப்பட்டு இணைச் சாம்பியன்களாக இலங்கையும் இந்தியாவும் அறிவிக்கப்பட்டமை சிலருக்கு மகிழ்ச்சியையும் சிலருக்கு வருத்தத்தையும் கொடுத்திருக்கும். இதற்குக் காரணம் சகலவித ஏற்பாடுகளையும் மீறி வருண பகவானின் தேவையற்ற தலையீடு. எது எவ்வாறாயினும் ஒன்றைக்கூற வேண்டும். கிரிக்கெட் ஆட்டம் A Game Of Glorieas Uncertinities எனவே இறுதியாட்டம் எந்த வகையில் முடிவடைந்திருக்கும் என்பதை ஊகிப்பது கடினம். ரசிகர்கள் தம் விருப்பு வெறுப்பிற்கேற்ப ஊகித்துத் திருப்தியடைந்து கொள்ள வேண்டியதுதான்.

சரண்யன்

ஊகித்தல் எனும்போது ஒன்றைக் குறிப்பிட வேண்டும். நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு லீக் முறையில் ஆட்டங்கள் நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் முதல் சுற்று ஆட்டத்தில் ஒவ்வொரு ஆட்டத்தின் முடிவினைக் கொண்டு சில பிரிவுகளில் இருந்து வெளியேறும் இரு அணிகள் எவை என்பதை இலகுவாகக் கணித்துக் கொண்டார்கள். இந்நிலை சுற்றுப் போட்டியின் ரசிப்புத் தன்மை என்றவகையில் ரசிகர்களுக்கு சிறிது சோர்வைக் கொடுத்தது என்பது என்னவோ உண்மைதான். ஒரு ரசிகர் கருத்துக் கூறும்போது சில ஐ.சீ.சீ. ஆட்டங்களை விட, இவ்வணிகள் பங்கு கொண்ட WARM UP GAMES உற்சாகமானவையாக இருந்தன என்று குறிப்பிட்டார். எது எவ்வாறாயினும் இந்தப் போட்டிகள் பல முனைகளில் முக்கியமானவை. ஏனெனில் அடுத்த வருடம் தென்னாபிரிக்காவில் நடைபெற இருக்கும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்குப் பல வழிகளில் கட்டியங் கூறுவனவாக சர்வதேச அணிகளுக்கு இவ்வாட்டங்கள், அவதானிப்புகள் அமைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அவுஸ்திரேலியா இலங்கையிடம் இப்படிச் சுருளும் என்று யார் எதிர்பார்த்தார்கள்.



பொலக்

அப்படியாயின் வோ சகோதரர்களின் சேவை மீண்டும் அவுஸ்திரேலிய அணிக்குத் தேவையா? மிகப் பிரபல்யமான வீரர்களைத் தன்னகத்தே கொண்ட தென்னாபிரிக்க அணி சுருண்டுவிட்டதே ஏன்? அப்படியாயின் அணியில் என்னென்ன மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டும். மேற்கிந்திய அணி வீறு கொண்டெழ இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும். இந்தியாவுக்கு ராகுல் டிராவிட் தான் விக்கெட் காப்பாளரா? இலங்கை அணிக்கு அவிஸ்க, மற்றும் றொமேஸ களுவிதாரண வேண்டத்தகாதவர்கள் ஆகிவிட்டார்களா? இங்கிலாந்து அணிக்கு இந்திய அணி என்றால் அலர்ஜியா? பாகிஸ்தானின் தோல்விகளுக்கு ஒட்டு மொத்தக் காரணங்கள் என்ன? இப்படியாக எத்தனை எத்தனையோ கேள்விகள் ரசிகர்கள் மனதில் எழுகின்றன. ஆனால் தெரிவாளர்கள் தமக்கெனக் கொண்டுள்ள நியாயபூர்வமான அளவுகோல்களின் அடிப்படையில் அணிகளைத்



பொண்டிங்

தெரிவுசெய்யும்போது அப்போதும் இப்படியான ஓயாத வினாக்கள் வினவப்பட்டுக் கொண்டுதான் இருக்கப் போகின்றன.

ஐ.சீ.சீக்கு மீண்டும் 2004 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் மீண்டும் ஒரு பலப்பரீட்சை. அதற்காக ரசிகர்கள் காத்திருப்போம். அதற்கு முன் 2003இல் தென்னாபிரிக்காவில் உலகக் கிண்ணப் போட்டிகள். காலச் சக்கரம் வேகமாக ஓடட்டும். அதோடு சேர்த்து சூதாட்டம் பற்றிய சர்ச்சைகள் தொலைதூரம் ஓடட்டும். முறைத்தல்கள், உரசல்கள், கடும் பார்வைகள் தொலையட்டும் (BODY LANGUAGE). கனவான்களின் ஆட்டம் தொழில்சார் நிலையின் அழுத்தங்களால் பலவீனப்பட்டு போகாமல் கண்ணியம் மலரட்டும்.

# ரசனைகள் மாறும் போக்கில் ஆட்டங்களும் மாறும்!

கிரிக்கெட் ஆட்டங்களில் பாரம்பரியமாகப் பேசப்பட்டு வருவது டெஸ்ட் ஆட்டங்களாகும். எனினும் நீண்ட நாட்கள், நீண்ட நேரம் எடுக்கும் ஆட்டம் என்ற வகையில் ஆர்வம் குறைந்து போகும் நிலையில் ஒருநாள் ஆட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஒருநாள் ஆட்டங்கள் அன்றே முடிவடைந்து விடுவதாலும், போட்டியின் முடிவு நிச்சயமாகத் தெரிவதாலும், கூடிய விறுவிறுப்புக் கொண்டதாக இருந்தமையாலும் ரசிகரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இன்றும்கூட டெஸ்ட் போட்டிகளின் முக்கியத்துவம் குறையவில்லையாயினும், ஒரு நாள் போட்டிகளின் செல்வாக்கு மிகமிக உயர்ந்து கொண்டே செல்வதை அவதானிக்கலாம்.

இது ஒருபுறம் இருக்க - இன்றைய உலகின் வேகமான வாழ்நிலை ஓட்டம் ஒருநாள் போட்டிகள்கூட அதிக நேரத்தை எடுக்கின்றனவோ என்ற எண்ணத்தை ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்த ஆரம்பித்திருக்கும் வேளையில், இதிலும்கூட சில மாற்றங்களைச் செய்தால் என்ன என்ற எண்ணத்தில் இன்னொரு புதிய கிரிக்கெட் வடிவம் அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது.

புதிய இந்த அறிமுகம் உள்ளரங்கக் கிரிக்கெட் ஆட்டமாக அமையப் போகின்ற வேளை, ஆட்டம் டெஸ்ட் போட்டி போலவே தலா இரண்டு இனிங்ஸ்கள் கொண்டதாக அமையும். ஒவ்வொரு இனிங்சும் பதினைந்து ஓவர்களைக் கொண்டதாக அமையும்.

பந்தை எல்லைக் கோட்டுக்கு மேலால் அடிப்பதென்பது மூன்று படிமுறைகளில் அமையும். அதியுயர் படியைத் தாண்டும் பந்துக்கு பத்து ரண்கள், இரண்டாம் படியைத் தாண்டும் போது எட்டு ரண்கள், தரையுடன் இணைந்த மூன்றாம் படியினைக் கடந்தால் இன்று காணப்படும் சாதாரண ஆறு ரண்கள்.

இவ்வகை ஆட்டங்களும் ரசிகர்களுக்கு ஆட்டத்தின் முடிவொன்றை நிச்சயம் தரும். அதேவேளை உள்ளரங்க ஆட்டமாக இருப்பதால் மழையின் காரணமாகத் தடைப்படும் அபாயம் இல்லை. (கங்குலிக்கு மன ஆறுதலாக இருக்குமோ?) அதோடு நான்கு அல்லது ஐந்து மணிநேரத்துக்குள் சகல விடயங்களும் முடிவடைந்துவிடும்.

தெய்வா

இத்தகைய ஆட்டங்கள் இரண்டு ஒக்டோபர் 4 மற்றும் 6 ஆம் திகதிகளில் இங்கிலாந்தில் நடைபெற இருக்கின்றன. முதன் முதலாக இவ்வறிமுக உள்ளரங்க சர்வதேச ஆட்டங்களில் பங்கு கொள்ளப்போகும் அணிகள் இங்கிலாந்தின் 'பிரிட்ஸ் xi'. இதற்கு நஸார் உசேய்ன் தலைவர். அடுத்தது உலகத் தெரிவு அணி xi. இதன் தலைவர் நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளேமிங். தெரிவு அணியில் இலங்கை வீரர்கள் அரவிந்த டி சில்வாவும், முத்தையா முரளிதரனும் இணைக்கப்பட்டுள்ளனர். இந்திய அணி வீரர்கள் சிறிநாத், லக்ஸ்மன், யுவராஜ்சிங் ஆகியோரும் விளையாடுகிறார்கள்.

இந்தப் போட்டிமுறை டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளின் அம்சங்கள் கலந்ததாகவும், மேலும் விறுவிறுப்புக் கூடியதாகவும் அமையும். பாஸ்கில் சீர்செய்யப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. எதிர்காலத்தில் வேகமான ஆதரவை இப்போட்டிகள் பெறுமாயின் சிலவேளைகளில் இன்று அமோக ஆதரவை ரசிகர்கள் மத்தியில் பெற்றிருக்கும் ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகள் 'போர்' அடிக்கின்றன என்று முணுமுணுப்பு எழுந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. பழையன கழிதலும் புதியன புகுதலும் தவிர்க்கமுடியாத இயற்கையின் நியதிகள் அல்லவா!

# பொன்மகள் சுசந்திகா!



பதின்நான்காவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் தென்-கொரிய புஸான் நகரில் சாஜி ஸ்ரேடியத்தில் ஆரம்பித்தபோது இலங்கைக் கொடியுடன் முன்னணியில் சென்றவர் சுசந்திகா ஜயசிங்க. சிட்னி ஒலிம்பிக் வெண்கலப் பதக்கம் வென்றவர், அண்மையில் ஸ்பானியாவில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தடகளப் போட்டிகளில் 100 மீற்றரில் வெண்கலம், 200 மீற்றரில் 4ஆம் இடம் பெற்றவர். இம்முறை ஆசியப்போட்டிகளில் 100மீற்றர், 200 மீற்றர் இரண்டிலும் தங்கம் வெல்வது தனது எண்ணம் என்கிறார் 27 வயது நிரம்பிய சுசந்திகா. ஒலிம்பிக்ஸ், IAAF WORLD CHAMPION SHIPS, உலகக்கிண்ணப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற சுசந்திகா ஆசியப் போட்டிகளில் இதுவரை தங்கப்பதக்கங்கள் பெறவில்லை என்பது ஒரு செய்தி. 14ஆவது ஆசியப்போட்டிகளில் நிச்சயம் பதக்கங்கள் வெல்வார் என்பது நம்பிக்கையான செய்தி. அவருக்கு வாழ்த்துக்கள்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*எந்தவொரு சமூகத்தினதும் இயற்கையான இரக்க சுபாவம் ஏமாற்றப்படும் போது அச்சமூகம் ஒரு போதும் தாங்கிக் கொள்ளாது.*

-பௌலர்

# நமது நோக்கு

## பேச்சில் அல்ல, செயலில் வேண்டும்!

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக மனித உரிமை ஆர்வலர்களது பிரசன்னமும், பாராளுமன்ற மனித உரிமைகள் தெரிவுக்குழுவின் வருகையும் - மனித உரிமைகள் பற்றிய பலரது கவனத்தையும் தம்பக்கம் திருப்பி இருக்கின்றன.

யாழ்.செயலகத்தில் மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்களும் மக்கள் சந்திப்புக்களும் நடைபெற்றுள்ளன.

யாழ். குடாநாடு போர்க்களமாக இருந்த கடந்த காலங்களில் இராணுவ நடவடிக்கைகள் என்ற பெயரிலும், தேடுதல் சுற்றிவளைப்புகளின்போதும், நூற்றுக்கணக்கான அப்பாவி உயிர்கள் 'காணாமல்' போனபோதும் - தலையே காட்டியிராதவர்களும், தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்படுவதை ஒரு பொருட்டாகக் கருதாதவர்களும் - இன்று 'சமாதான' காலத்தில் மனித உரிமைகள் பற்றித் தீவிர கவன ஈர்ப்புடன் வந்து கொண்டிருக்கின்றனர். மனித உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி மணித்தியாலக் கணக்கில் அலசுகின்றனர். இதுவரை யாழ்ப்பாணமே வந்திராத வெள்ளைச்சட்டைகள், யாழ். நிலையைப் பார்த்து 'உணர்ச்சி வசப்பட்டு' பேசவும் செய்கின்றன.

சரி இவை போகட்டும். உண்மையில் இன்றைய நிலையிலாவது தமிழ்மக்களின் மனித உரிமைகள் பற்றிப் பேசப்படுகின்றதே என்றளவில் சிறு திருப்தியடையத் தயாராவோம்.

ஆனாலும் - இந்தச் சிறு திருப்தியையாவது - தமது செயற்பாடுகளால் சம்பந்தப்பட்ட மனித உரிமைவாதிகள் உறுதிப்படுத்த முன்வருவார்களா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

இந்த மனித உரிமைவாதிகள் - போர்க்காலத்தை விட்டுவிட்டும். அவர்களால் முடியாதுபோன செயல்களின் முடிந்துபோன பக்கங்களாக அவை போகட்டும்.

ஆனால் - இன்று சமாதான காலத்தில் மீறப்படும், தடுக்கப்படும், வழங்காதிருக்கும் தமிழ்மக்களுக்கான மனித உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க இவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்பதே மக்களது எதிர்பார்ப்பாகவுள்ளது.

ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது சொந்த வாழ்விடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட நிலையில், வேரறுக்கப்பட்ட பசுமரங்களாக வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் தத்தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் உரிமை பெற்றுத்தரப்படுமா?

உயர்பாதுகாப்பு வலயங்களாயிருக்கும் பிரதேசங்களில் காலம்காலமாக தொழில் வாய்ப்புக்கள் சீரழிக்கப்பட்டுள்ளன. சுதந்திரமான தொழில் உரிமை பெற்றுத்தரப்படுமா?

வீதிகள் தடுக்கப்பட்டும், வைத்தியசாலைகள் மற்றும் பல பொது இடங்கள் படைமுகாம்களாக தொடர்ந்திருந்தும் வருகின்றன. போக்குவரத்துக்கான உரிமையும், அடிப்படைவசதிகளை அனுபவிக்கும் உரிமையும் பெற்றுத் தரப்படுமா?

உயர் பாதுகாப்பு வலயங்களில் ஏராளமான பாடசாலைகள் அணுகிப் பார்க்கக்கூட முடியாத நிலையில் அழிந்து போயுள்ளன. அங்கு கல்வி கற்க வேண்டிய மாணவர்கள் தற்காலிக கொட்டகைகளில், மழை, வெயில் காலங்களில் பெரிதும் பாதிப்படைந்தும், மரநிழல்களிலுமாக கல்விகற்று வருகின்றனர். அவர்களுக்கான, நாட்டின் ஏனைய பகுதி மாணவர்கள் அனுபவிக்கும் கற்றல் உரிமை பெற்றுத் தரப்படுமா?

இதுபோல், ஏராளம் மனித உரிமை மீறல்கள் இந்தச் 'சமாதான' காலத்திலேயே கண் முன்னால் நிகழும்போது - மனித உரிமை அபிமானிகளின் பணி என்னவாக இருக்கப் போகின்றது?

இன்று சர்வதேசமும் ஆழ்ந்து கவனிக்கும் மனித உரிமை விடயங்களுக்காக ஏராளம் நிதியுதவிகள் வழங்கப்பட்டு வரும் இந்நிலையில் -

மனித உரிமை ஆர்வலர்களும், அரசியல்வாதிகளும் - அறிக்கைவாதிகளாக மட்டும் இருந்துவிடாது செயலிலும் மனித உரிமைகளைக் காக்கத் தயாராக வேண்டும். அதுவே மக்களுக்கான உண்மையான சேவையாகவும் இருக்கும்.

# தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளுக்கு முக்கியத்துவம் தரும் சிங்கள ஊடகங்கள்

2ஆம் லெப். மாலதி நினைவுதினத்தை முன்னிட்டு பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வுகள் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் பெண்கள் எழுச்சிதினத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

பெருமளவிலான தென்பகுதி மக்களும் தென்பகுதி பத்திரிகையாளர்களும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் சிங்கள ஊடகங்களில் இந்நிகழ்வுகள் தொடர்பான தகவல்களும், விளம்பரங்களும் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனியார் மயமாக்கலை எதிர்க்க விடுதலைப் புலிகளும் இணையலாம்!

## வாசுதேவ நாணயக்கார அழைக்கிறார்

(கொழும்பு)

அரச நிறுவனங்களை அரசு தனியார் மயப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளமைக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் தம்முடன் இணைந்து கொள்வதற்குத் தடையில்லை என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருக்கிறார்.

இலாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் பல அரச நிறுவனங்களை அரசு தனியார் மயப்படுத்துவதற்கு முன்வந்துள்ளது. இதற்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளின் அமைப்பும், தொழிற்சங்கங்களுடன் இணைந்து நாளை மறுநாள் கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளன. இதற்கு ஆதரவாகவே விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளவிரும்பின் தாம் அதை வரவேற்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

அரசு மேற்கொள்ளும் தனியார் மயமாக்கலின் எதிர் விளைவுகளை கருத்தில் கொண்டும், அதனை தடுத்து நிறுத்த வேண்டிய முக்கியத்துவத்தினை உணர்ந்தே தாம் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்த முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

# இடிமின்னல் தாக்கம் அதிகரிக்கும்! வளிமண்டலவியல் அதிகாரி எச்சரிக்கை!!

(கொழும்பு)

பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து இடி மின்னல் பாதிப்புகள் கடுமையாக இருக்குமென எதிர்பார்ப்பதாக வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி கலாநிதி சந்தன ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் மழை பெய்யும்போது கடுமையாக இடி மின்னல் ஏற்படக்கூடும். இதனால் மக்கள் மிகவும் பாதுகாப்புடன் செயற்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடுமையாக இடி மின்னல் ஏற்படும்போது திறந்தவெளிகளிலும் மரங்களுக்கு கீழும் உயரமான இடங்களிலும் நிற்பதனை தவிர்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக நீர் நிலைகளில் குளிப்பதையும் மின் உபகரணங்களைப் பாவிப்பதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் மக்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

மின்னல் ஏற்படும்போது தொலைபேசியைப் பாவிப்பதனாலும் மின்னல் தாக்குதலுக்கு உட்பட வேண்டி ஏற்படலாம்.

இதனால் இந்த நேரங்களில் மக்கள் மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டியதுடன் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வருடம் நாடு முழுவதும் இடிமின்னலினால் தாக்குதலுக்கு இலக்காகி 38 பேர் மரணமானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பஸ் நிலையம் முன்பிருந்த காவலரண் அகற்றப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையப் பகுதிக்கு முன்பாக நீண்டகாலமாக இருந்த இராணுவத்தினரின் காவலரண் நேற்று முன்தினம் இரவு அகற்றப்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாகவே மக்களின் போக்குவரத்திற்கும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மத்திய பஸ் தரிப்பிடத்திற்கும் சென்றுவர இந்தக் காவலரண் இடையூறாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# கொத்தியாலடி மயானத்தில் கழிவுகளின் துர்நாற்றம்!

(புன்னாலைக்கட்டுவன்)

சுன்னாகம் - புத்தூர் வீதியில் உள்ள கொத்தியாலடியில் உள்ள மயானப் பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசுகின்றது.

இப்பகுதியில் கழிவுப் பொருட்களை போடுவதற்கான கொள்கலன்கள் இருந்தபோதிலும் அவற்றை உரியமுறையில் பாவிக்காது, கொல்லப்படுகின்ற மாடுகளின் எச்சங்களை கண்டபடி வெளியே வீசுவதால் அவற்றிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் இவ்வழியால் பயணிக்கும் மக்கள் அசௌகரியப்படுவதுடன், இது குறித்து உரியவர்கள் தீர்வு எடுக்காமை குறித்தும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (83)

### வளரும்.....

அமைவதுடன் சங்கத்தின் முதன்மையான பிரச்சினையொன்றையும் தீர்க்கிறது என்று மிகுந்த நன்றியுடன் கூறுகிறார். இதே உணர்வுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமக்கு வழங்கிவரும் ஆதரவையும் குறிப்பிட்டு சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டுகிறார். யாழ்.பல்கலைக்கழகம் சகல கழகங்களையும இணைத்து மூன்று சிறப்பான தாச்சிச் சுற்றுப்போட்டிகளை நடாத்தியது. அங்கேயே ஆண்கள், பெண்கள் இரு பிரிவினருக்குமான அணிகள் உண்டு. அவர்கள் தாச்சி வீரர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தமையானது கிராமப்புறங்களுக்கு ஒரு கௌரவமாகவும் அங்கீகாரமாகவும் கொள்ளத்தக்கது. இது வீரர்கள் மத்தியில் ஒரு பெருமித உணர்வை ஏற்படுத்தியது. யாழ். பல்கலைக்கழகத்தினர் தாச்சிச் சங்கத்தின் அனைத்துத் தரப்பினரதும் நன்றிக்கு உரித்தானவர்கள் என்று கூறுகிறார்.

தற்போது மத்தியஸ்தர்களுக் கான பயிற்சி வகுப்புக்கள் நடாத்தி வருவதையும் வீரர்களுக்கான (30 பேர் கொண்ட அணி) பயிற்சி முகாம்கள் நடைபெற்று வருவதையும் தாச்சிப் போட்டிகளின் தர உயர்வுக்கான செயற்பாடுகளாகக் கருதும் அவர் இது மிகுந்த பலனை அளித்துள்ளது என்கிறார். பெண்களுக்கான அணிகள் யாழ்.மாவட்டத்தில் எட்டு இருப்பதாகவும் இவையும் எண்ணிக்கையில் கூடும் என்ற நம்பிக்கை கொண்டவராகக் காணப்படும் அவர் இன்னும் ஒரு சாராரின் ஆதரவையும் வேண்டி நிற்கிறார். பிரதேச செயலகங்கள் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் பல்வேறு போட்டிகளை நடாத்தி வளர்ச்சிக்கு வித்திடும்வேளை தாச்சிப்போட்டிகளை நடாத்துவதில்லை. அவர்கள் தங்கள் ஆதரவைத் தருவார்களாயின் தாச்சி விளையாட்டு வேகமாகப் பரவலாக்கப்படக் கூடுதலான பணியைச் செய்தவர்கள் ஆவார்கள் என்றும் இனிவரும் காலங்களில் சாதகமான முறையில் இதனைப் பரிசீலிப்பார்கள் என்ற நம்பிக்கை தனக்குண்டு என்றும் நம்புகின்றார் தாச்சிச் சங்கத்தின் தலைவர்.

பழமையின் பெருமையை மறைக்க விரும்பாத இந்த இளந்தலைவர், தாச்சிப்போட்டிகளை பிரபல்யப்படுத்த வேண்டும், இதை அமைப்புரீதியாக ஒரு பலமான சார்பாக அமைக்க வேண்டும் என்று பெரும் ஆர்வம் கொண்டிருந்த தற்போது 65 வயதாகும் நா.பேரம்பலம் அவர்களை நினைவு கூறுகின்றார். அவர் ஒரு சிறந்த மத்தியஸ்தராகவும் வீரராகவும் இருந்தார் என்று மேலும் கூறுகிறார்.

இதுவரையில் தமக்கென நிரந்தரக் கட்டடமோ மைதானமோ இல்லையெனக் குறிப்பிடும் இவர் வசதி குறைந்தோரின் பிரபல்யமான ஆட்டமாக இது இருப்பதால் அவர்களுக்கும் சீருடை போன்றவற்றையும் தந்துதவ வேண்டுமென்றும் கேட்டிருப்பதாகக் கூறும் அவர் விரைவில் இவை சாத்தியமாகும் என்ற நம்பிக்கை தமக்குண்டென்று கூறுகிறார்.

ஆர்வம் நிறைந்த நிதானமான இளந்தலைவர்; வேகமாக வளர்ந்துவரும் தாச்சி விளையாட்டு; எமது பாரம்பரிய விளையாட்டு. இதனை வளர்த்து எடுக்க விளையாட்டு ரசிகர்கள் தம் பங்களிப்பினைச் செய்யவேண்டும். வீரர்கள் புதிதாகத் தோன்ற வேண்டும். எமது விளையாட்டின் வளர்ச்சியில் நாம் பெருமை கொள்ளவேண்டும்.

### ஆசிய....

குலத்தை ஒன்றிணைப்பது உண்மையாக இருந்தால், மனித குலம் அதனை நடைமுறையில் செயற்படுத்திக் காட்ட முன்வர வேண்டும். அவுஸ்திரேலிய, பாகிஸ்தான் அணிகள் தம் டெஸ்ட் ஆட்டங்களை பாகிஸ்தான் மண்ணில் நடாத்த முடிந்திருந்தால் அதன் பரிமாணம் என்ன? சில தங்கப்பதக்கங்களையாவது தட்டிச்செல்லும் வாய்ப்பினை ஈராக்கிய வீரர்களுக்கு சர்வதேச சமூகம் கொடுத்திருந்தால் அந்த வீரர்களின் திறமையின் சர்வதேச கணிப்புக்கு அளவுகோல் என்ன? ஏன் இந்தியாவும் பாகிஸ்தானும் தத்தம் மண்ணில் பரஸ்பரம் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு இருந்தால் மனித நேயம் இன்னும் மெருகூட்டப்படாதா? ஆப்கானிஸ்தான் வீரர்கள் பத்தாண்டுகளுக்கு தம் திறமையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் கொடாமை எவ்வளவு பாவம்? இப்படி பத்திபத்தியாகத் துன்ப உணர்வுகளை விளையாட்டு ரசிகர்கள் அடுக்கிக் கொண்டே போவார்கள் மன ஆதங்கத்துடன். நிச்சயம் சர்வதேச சமூகம் இதற்காக வெட்கப்பட்டே ஆகவேண்டும்.

என்றாலும் ஒரு ஆறுதல், வடகொரிய, தென்கொரிய வீரர்கள் கைகோர்த்து ஒன்றாக வந்தார்களே 14வது ஆசிய விளையாட்டுப் போட்டி களின் ஆரம்பத்தில். கிழக்குத்தீமோர் என்னும் புதிய உதயம் பங்குகொள்கின்றதே ஆசியப் போட்டிகளில். அக்கினியில் வாழ்ந்த ஆப்கானிஸ்தான் வீரர்கள் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் செய்தியை கேட்கின்றோமே. இவையெல்லாம் விளையாட்டின் மூலம் உலக சகோதரத்துவத்தை, சமத்துவத்தை ஏற்படுத்தலாம் என்று நம்பும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நம்பிக்கைதரும் நிகழ்வுகள்.

விளையாட்டுத்துறையை நேசிப்பவர்கள் நம்பிக்கையுடன் இருப்போம். எதிர்காலத்திலும் நிறைய நல்லவையே நடக்கும். விளையாட்டு மனிதகுலத்தின் ஒட்டுமொத்த உறவுக்கு வழி வகுக்கும். அதற்காக நாம் உழைப்போம். பாடுபடுவோம்.

# உலகச் சந்தையில் வன்னியின் ஏற்றுமதிக் கிராமங்கள்

ஒரு கிலோஅரிசி 80 ரூபாவுக்கு விற்கிறதென்றால் நீங்கள் நம்புவீர்களா? ஏதோ அரிசித் தட்டுப்பாட்டால் இந்த விலை ஏற்பட்டது என நீங்கள் கருதினால் அது தவறானது. உண்மையில் 80 ரூபாவுக்கு ஏன் அந்த அரிசி விலை உயர்ந்தது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். இன்றைக்கு அந்நியப் பொருட்கள் எமது மண்ணை நிறைத்து வருகின்றன. எமது சுய உற்பத்தியெல்லாம் பெறுமதியற்று முடங்கிப் போய் விடுமோ என்ற அச்சம் எமது உற்பத்தியாளர்களை பிடுங்கித் தின்கிறது. அவநம்பிக்கை எமது மக்களை ஆட்கொள்ளத் தொடங்கிவிட்டது. உண்மையில் நாம் எமது உற்



தி. இராசநாயகம்
அரசாங்க அதிபர், கிளிநொச்சி.

பத்திகளை சர்வதேச சந்தையில் பெறுமதியுடையதாக்கலாம். எப்படி? என்பதை விளக்குகிறார் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம்.

**ஏற்றுமதிக் கிராமங்கள்**

எமது மண்ணின் உற்பத்திப் பொருட்களை பெறுமதி சேர்த்து அந்நியச் சந்தையில் வலுவானதாக்குவதற்கு நாம் செய்ய வேண்டிய ஏற்பாடு - ஏற்றுமதிக் கிராமங்களை அமைப்பதாகும். எமது சுய உற்பத்தியில் அந்நியச் சந்தையில் பெறுமதியை கொண்டவை வேளாண்- விலங்கு வேளாண உற்பத்திகளாகும். ஆகவே ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்கும் வளமும், வாய்ப்பும் வன்னிக் கிராமங்களுக்கே உண்டு.

ஏற்றுமதிக் கிராமங்கள் எனப்படும்போது பெரிதாக ஒரு வேலையைச் செய்யப் போவதில்லை. உற்பத்திகளை அறிவியல் பூர்வமாக்கி- விளைவுகளை அதிகமாக்குவதே இங்கு நாம் ஆற்றும் பணியாக இருக்கப் போகின்றது. இதற்கான கிராமங்களை நாம் தெரிவு செய்யவேண்டும். தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் எந்தப் பயிர்களை அதிகளவில் பயிரிட்டு விளைவிக்க முடியுமோ அந்தப் பயிர்ச் செய்கையை - விவசாயிகள் அனைவரையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து அறிவியல்பூர்வமாக உற்பத்தியைப் பெருக்கவேண்டும். இதன்பின் உற்பத்திகளை அந்நிய சந்தைக் குரியதாக்க அதற்கு பெறுமதி சேர்க்க வேண்டும்.

**பதப்படுத்தல் முறைகள் மூலம் இவற்றுக்கு பெறுமதியை கூட்டலாம்**

இன்றுள்ள பூகோள மயமாக்கலில் உலக சந்தையில் பூச்சி நாசினி பயன்படுத்தப்படாத, செயற்கை உரம் பாவிக்கப்படாத விவசாய உற்பத்திகளுக்கு பெறுமதி அதிகம். மொனறாகலையில் உருவாக்கப்பட்ட மாதிரி ஏற்றுமதிக் கிராமத்தில் இயற்கை உரம் பயன்படுத்தப்பட்டு கிருமிநாசினி பயன்படுத்தப்படாது விவசாய உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு இந்த வகையில் விளைவிக்கப்பட்ட அரிசி 80ரூபா விலைக்கு விற்கப்பட்டது. இயற்கைப் பசளையில் கிருமிநாசினி பாவிக்கப்படாது விளைக்கப்பட்டது என்ற காரணத்தால் அதன் விலை 80ரூபாவாக உயர்ந்தது. அரால் எம். ரேட்ஸ் விமான நிறுவனம் மொத்தமாக இந்த அரிசியை கொள்வனவு செய்தது.

**பிரான்சில் பூநகரி அரிசி**

இன்று தாயகத் தமிழ் மக்கள் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் தமது பாரம்பரிய உணவுப் பொருட்களை அதிகளவில் இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்கிறார்கள். அந்த மக்கள் தமது தாயகத்தின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்யத் தயாராகவுள்ளார்கள். அதேவேளை உலகளவில் இயற்கை வேளாண் உற்பத்திகளுக்கான கேள்விகள் அதிகம். இன்றுள்ள நிலையில் இயற்கை வேளாண்மைப் பொருட்கள்மூலம் நாம் எமது பொருட்களுக்கு உலக சந்தையில் அதிக விலையைப் பெறுவதுடன் - எமது மண் சேதமாகாமலும் பாதுகாக்கலாம். எமது விவசாயிகளுடன் - நுகர்வு முதலாளிகளை இணைப்பதன் மூலம் எமது உற்பத்திகளுக்கு உலகசந்தை வாய்ப்பைப் பெறமுடியும்.

இந்த வகையிலேயே எமது ஏற்றுமதிக்கிராமங்களை அமைக்கமுடியும்.

**வன்னியில் வேளாண் மாவட்டமாக கிளிநொச்சி உள்ளது**

கிளிநொச்சியில் ஏற்றுமதிக் கிராமங்களை அமைக்கக்கூடிய இடங்கள்-முழங்காவில், பூநகரி, திருவையாறு, அக்கராயனின் ஸ்கந்தபுரம், பிரமந்தனாறு, கல்மடு ஆகியனவாகும்.

இன்றும் பூநகரியில் காவோலை, எரு, வீட்டுக் குப்பைகளைப் பயன்படுத்தி நெல்லை செய்கை பண்ணுகிறார்கள். பாரம்பரிய இனங்களே பூநகரியில் செய்கை பண்ணப்படுகின்றன.இவற்றுக்கு சுவை அதிகம். இன்று ஐரோப்பிய நாடுகளில் எம்மவர்களிடம் பூநகரி அரிசி என விளம்பரப்படுத்தப்பட்டு வேறு அரிசிகள் விற்கப்படுகின்றன. அந்தளவு கேள்வி பூநகரி அரிசிக்கு அங்கு உண்டு. அதே போல் பூநகரி செத்தல் மிளகாய்க்கும் உண்டு.

இதன்மூலம் எமது பொருட்களுக்கான பெறுமதியை நாம் உணரமுடியும். பூநகரி தவிர்ந்த ஏனைய ஏற்றுமதிக் கிராமங்கள் வாழை மற்றும் மரக்கறிகளுக்கானவையும். சகல இயற்கை வேளாண்மை உத்திகளை பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கி பெறுமதி சேர்த்து இன்றைய பூகோளமயமாக்கல் உலக சந்தையில் நாமும் போட்டி போடலாம். இதற்காக எம் ஏற்றுமதிக் கிராமங்கள் தரமான சாலை அமைப்புக்கள் மூலம் நகரங்களுடன் இணைக்கப்படும். அதேவேளை கிராமங்களின் தனித்துவம் குன்றாது, கிராம மக்கள் நகரங்களை நாடாத வகையில் மக்களுக்கான சேவை நிலையங்கள் கிராமங்களில் அமைக்கப் படவேண்டும்.

கிளிநொச்சியைப் பொறுத்தவரை இந்த சேவை நிலையங்கள் - முரசுமோட்டை, பரந்தன், குஞ்சுப்பரந்தன், தருமபுரம், பூநகரி, முழங்காவில் நாச்சிக்குடா, அக்கராயன் ஆகிய இடங்களில் அமைய வேண்டும்.

## விருந்தினர் பக்கம்

பொருளாதார வல்லாண்மை நாடுகள் கொண்டு வரும் பூகோள மயமாக்கல் சந்தையில் எம் சுய உற்பத்திகளுடன் போட்டி போட்டு வெற்றியீட்டி எமது தேசத்தையும் மக்களையும் வளம்படுத்த ஏற்றுமதிக் கிராமங்களே ஏற்றவை. வன்னியைப் பொறுத்தவரை எமது நுகர்வுக்கானதை விட விவசாய உற்பத்திகள் மிகுதியாக மிஞ்சுகின்றன. இவற்றை மலிந்த விலையில் விற்காது அவற்றுக்கு பெறுமதி சேர்த்து உலக சந்தையில் பெரும் வருமானத்தை நாம் ஈட்டவேண்டும். நிச்சயம் நாம் வெல்லலாம். எமது வளங்களை இழக்காமல் உலகின் ஓட்டத்தில் இணைய இதுவே பொருத்தமான வழி.

நேர்காணல்: அறிதிரு

# பூப்பொழிந்து வாழ்த்துகின்றோம்! புனிதப்பணி தொடரட்டும்!!

## இன்று உலக ஆசிரியர் தினம்

*"கேடில் விழுச் செல்வம் கல்வி"* என்றார் திருவள்ளுவர் அதாவது அழிவில்லாத செல்வம் கல்வி, இந்தக் கல்விச் செல்வத்தை எமக்கு ஊட்டுபவர்கள் ஆசான்கள். அந்தபுனிதப் பணியை செய்யும் ஆசிரியர்களிற்கு இன்று ஒக்ரோபர் 6ஆம் திகதி விழா எடுக்கப்படுகின்றது.

*"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்*
*மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் மன்னனிற்கு*
*தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்கு*
*சென்ற இடமெல்லாம் மதிப்பு"*

என்று ஒரு தத்துவக் கருத்துள்ளது. மன்னனிற்கு தன் தேசத்தில் மட்டும் தான் சிறப்பு. கற்றவர்களிற்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. இந்தச் சிறப்பெல்லாம் கற்றவனை விட அவனை கற்பித்து உயர்த்தி வைத்த ஆசிரியர்களையே சாரும்.

நிலையில்லாத இந்த உலகில் நிலையாக நிலைத்து நிற்பது கல்வி. கள்வரால் கவரப்பட முடியாத செல்வம் கல்வி. அத்தகைய விலையுயர்ந்த கல்வியை எமக்கு அளிப்பவர்கள் ஆசிரியர்கள்.

ஒரு மாணவனை சிறந்த மனிதனாக இந்த உலகத்திற்கு கொடுப்பவர்கள் ஆசிரியர்கள். ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து பள்ளிப்பருவத்தை அடைந்ததும் பாடசாலை செல்கின்றது. அங்கே அந்தக் குழந்தைக்கு மற்றைய மாணவர்களுடன் எவ்வாறு பழக வேண்டும் என்று ஆசிரியரால் அறிவுரை கூறப்படுகின்றது. பெற்றோரை எவ்வாறு மதிக்க வேண்டும் என்று எடுத்துக் கூறப்படுகின்றது.

படிப்படியாக குழந்தை புதிய வகுப்புக்களிற்கு செல்லும் போது அங்கே ஆசிரியர்களால் புதிய புதிய நடைமுறைகள் மாணவர்களிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. அங்கே அவர்கள் புதிய அனுபவங்களை எதிர் நோக்குகின்றனர். இவ்வாறு மாணவர்களுடன் தோளோடு தோள் நின்று கைகொடுத்து அவர்களை உயர்த்தி நல்லதொரு ஸ்தானத்தில் அமர்த்தி வைக்கும் இந்த ஆசிரியர்கள் ஆதிபகவானிற்கு ஒப்பானவர்கள்.

அதனால்தான் முதியோர்கள் சொல்வார்கள் கடவுளும் குருவும் சமனென்று. அது எந்தளவு தூரம் உண்மையானது என இன்று நாம் கண்களூடாகக் காண்கின்றோம்.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் வரும் விழாக்களிற்கு தம் மாணவர்களை நெறிப்படுத்தி அவர்களது ஆற்றலை வெளிக்கொண்டு வந்து அவர்களை அந்தத் துறைகளில் வழி காட்டி உயர்த்தி வைப்பவர்கள் இந்த ஆசிரியர்கள்.

மெழுகுதிரி உருகி எமக்கு ஒளி வழங்குவதைப்போல ஆசிரியர்கள் தம்மை உருக்கி அறிவு என்னும் ஒளியை எமக்கு ஊட்டுகிறார்கள்.

நாளைய சமுதாயத்தை கட்டி எழுப்பும் பாரிய பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியரிடமும் திணிக்கப்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் கடுமையாக உழைக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. முழு மூச்சுடன் தமது தொழிலைத் தெய்வமாக மதித்து செயற்படுகின்றனர்.

**கஜமுகன்**

நாம் ஒரு சிறந்த அறிவாளியுடன் உரையாடும்போது நான் இந்தப்பாடசாலையில் கல்வி கற்றேன் என்று கூறமாட்டான் இந்த ஆசானிடம் கல்வி கற்றேன் என்றுதான் கூறுவான். அது அவனிற்கு மேலும் பெருமை சேர்க்கின்றது. தற்பொழுது பின்தங்கிய பல பாடசாலைகளில் மாணவர்களை முன்னிலைக்கு கொண்டுவருவதற்காக தமது நேரங்களை ஒதுக்கி விட்டு அவர்களிற்கு விடுமுறை தினங்களில்கூட தமது சிரமங்களை சிந்தியாது மாணவர்களிற்காக உழைத்து கொண்டிருக்கும் இவர்களிற்கு நாம் என்ன கைம்மாறு செய்கின்றோம் சிந்தித்துப்பாருங்கள்.

ஒரு ஆசிரியர் மாணவனிடம் நண்பனைப்போல் பழகுகின்றார். இதன்மூலம் ஆசிரியரிற்கும் மாணவரிற்கும் இடையே ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளக்கூடிய நிலைஏற்படுகிறது. இவ்வாறு இருக்கும் பொழுது அந்த மாணவனிற்கு பெற்றோர் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது காரணங்களாலோ அவனிற்கு பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இதனால் அவன் தனது ஆசிரியரை அணுகி இந்தப்பிரச்சினையில் இருந்து எவ்வாறு விலகுவது, அல்லது எப்படி தீர்ப்பது என ஆலோசனை கேட்கும் போது நீ இந்தப்பிரச்சினையை இப்படி அணுகினால் நல்லது. குறுக்கு வழியில் அணுகாதே, ஆபத்துக்கள் வரக்கூடும் என்று ஒருஆசிரியராக, நண்பனாக, பெற்றோராக இருந்து நல்வழிப்படுத்துகின்றார்கள்.

ஆசிரியர் தனது கடமையின் போது பாடசாலையிலும் சரி, தனியார் கல்வி நிறுவனங்களிலும் சரி மாணவர்களிடையே அந்தஸ்து பார்ப்பதில்லை. ஏழைமாணவன், பணக்கார மாணவன் என்று பாரபட்சமோ, வித்தியாசமோ பார்ப்பதில்லை. எல்லோரும் தமது மாணவர்கள் எல்லோரும் தமது பிள்ளைகள் என எல்லா மாணவரையும் சமனாக நினைக்கின்றவர்கள். அத்தகைய ஆசான்களை நாம் பூப்பொழிந்து வாழ்த்த வேண்டும்.

பல மாணவர்கள் தமது கல்வி கற்ற புத்தகங்களை எடுக்கக்கூட நேரமில்லாது உயிருக்கு அஞ்சி ஓடியவர்கள் மனமுடைந்த நிலையில் இருந்த மாணவர்களை ஆறுதல் படுத்தி உற்சாகமளித்தவர்கள் இந்த ஆசிரியர்கள். இந்தப் பெரும் மதிப்புக்குரிய ஆசிரியர்களை நாம் போற்றி வணங்க வேண்டும்.

வகுப்பறையில் ஒரு மாணவன் தவறுசெய்துவிட்டான் என்றால் ஆசிரியர் மாணவனை தண்டிக்கமாட்டார். அவனை தன்னருகே அழைத்து இனிமேல் இப்படிச் செய்யாதே என்றுதான் தயவாகக் கூறுவார். ஏனெனில் தண்டித்தால் அந்த மாணவன் முரடனாக மாறிவிடுவான். அவனைத் தவறான வழியில் செல்லவிடாது தடுப்பதே ஆசிரியரின் நோக்கமாகும்.

யாழ்.நகரப் பகுதிகளிலுள்ள பிரபல பாடசாலைகளில் முன்னைய கால கட்டத்தில் அன்பளிப்பு வாங்கிக் கொண்டே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதனால் பல திறமையுள்ள ஏழை மாணவர்கள் மனமுடைந்தனர். ஆனால் தற்போது அவ்வாறில்லை எந்த மாணவனும் தான் விரும்பிய பாடசாலையில் கல்வி கற்கலாம். இதனால் மாணவரிடையே இலைமறைகாயாகவுள்ள பல திறமைகளை வெளிக்கொண்டு வர ஆசிரியர்களால் முடியும். அவர்கள் நிச்சயமாக முயற்சிகள் செய்வார்கள்.

ஆசிரியர்கள், மாணவர்களுக்குக் கல்வியைத் தனியே கற்பிப்பதில்லை. ஒழுக்கம், பழக்கவழக்கங்கள் என்பனவற்றையும் கற்றுக்கொடுக்கின்றனர்.

ஆகவே ஆசிரியர்களினது இந்த புனிதப்பணி தொடரட்டும் தொடர வேண்டும். அவர்களைப் பூப்பொழிந்து வாழ்த்துகிறோம். புனிதப்பணி தொடரட்டும்.

## வழிபாடும் வாழ்வும் ஒன்றாகும்போது இறைதரிசனத்தைக் காணலாம்

உடலுள காயங்களால் பாதிக்கப்பட்ட சமூகமாக துன்புறும் மக்கள், மனமாற்றம் வேண்டிநிற்கும் காலத்தில் தம் மனச்சுமைகளை கொட்டித்தீர்த்து பாவச்செயல்களுக்காக பரிகாரம்தேடி ஆலயங்கள், கோவில்கள் எங்கும் கூடிப் பிரார்த்திப்பதே இன்றைய நாட்களில் அதிகம் காணும் காட்சிகளாக உள்ளது.

சில கிராமங்களில் மீள்குடியேற்றம், புனரமைப்பு என முன்னெடுப்பதில் ஆலயங்களுக்கே முன்னுரிமை கொடுத்து ஆன்மீக வழியில் ஆற்றுப்பட முனைவது மிகவும் நல்வழிப்பயணங்களே, இவை ஆலய திருவிழாக்களுடன் மட்டும்தானா? எம் அயலான் மட்டில் நாம் அந்தப் பரமனின் தரிசனங்களை காணவிழையும்போதுதான் வழிபாடுகளும் வாழ்வும் ஒன்றாகக் காணமுடியும். இவை எம் சமூகத்தில் வளர்த்தெடுக்க பல்வேறு சந்தர்ப்பங்களும் உண்டு என்பதை தேடிச்சென்றாலே புரிந்து வாழமுடியும்.

'நோயற்றவர்களுக்கல்ல; நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்' என்பதன் கருத்தை நீங்கள் போய்க் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன் என்பார் யேசு.

மத்!,9.12.13.

- யோசப் பாலா -

பணித்தளங்கள் மலிவாக இருந்தாலும் சவால்கள் எம் எதிரிலே முகம்கொடுக்க முடியாதபோதும் எதிர்கொள்ள வேண்டியது இன்றைய அவசிய தேவையுமாகும். பலவிதத்தில் காயங்கள்பட்டு நோயுற்றோராக எம் எதிரே பலரைக் கண்டுகொண்டும் சொந்தம், பந்தம், உறவு என்றும் மதிப்பு மரியாதை புகழ்தேடியும் எம் பணிகள் குறுகிய மனம் கொண்டும் மனித பலவீனத்தால் இலகுவாக செய்து முடித்துவிட்டோம் என திருப்தி கொள்ளாது தேடிச் சென்று தேவை அறிந்து செய்யும் சேவையில்தான் இறைதரிசனத்தை காணமுடியும்.

ஞாயிறு சிறப்பம்சம்

நகரைச் சுற்றி நாலாபுறமும் சமூகப்பணிகளில் ஈடுபடுவோர், தூரத்தே கேட்கும் அழுகுரலுக்கு செவிமடுக்கத் தவறுவதால்கூட ஒதுக்கப்பட்டு விரக்தியில் உளக்காயத்துடன் வாழ்வோர், பல்கிப்பெருகி சமூகச் சீர்கேட்டுக்குள் தம்மை சீரழித்துவருவோர் அதிகமாகிவிட்டால் நேர்மையாளர்களை அல்ல. பாவிகளையே தேடிச்சென்று அழைத்துவர இறைவாக்குகள் மனிதசாயலில் வெளிப்படுத்தும் நாளிலேதான் உண்மைச் சமாதான சமநிலையில் பகிரமுடியும். இல்லையேல் சமாதானம்கூட ஒரு சாராருக்கு என்றாகிவிடும்.

ஒவ்வொருவரும் சமாதானத்தின் கருவிகளாகமாறி தேடிச் சென்று உடலுள காயங்களை ஆற்றும் தூதுவராக மாறும்போது பலியை அல்ல இரக்கத்தைக் கொடுக்கும் மனமுள்ளோராய் மனித சமூகத்தை கொடுக்கும் இறைசாயலில் வலிமையில் கட்டி வளர்க்க முடியும் இதுவே இன்றைய காலத்தின் தேவையுமாகும்.

# யாழ்.அபிவிருத்திச்சபைக் கூட்டத்திலிருந்து...

## அபிவிருத்திக்கு வெளிநாடுகளிலிருந்து [illegible]தி சேகரிக்க சாவகச்சேரி அழிக்கப்பட்டது!

### சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளிலிருந்து இலங்கையின்அபிவிருத்திக்கு நிதிசேகரிப்பதற்காகவே சாவச்சேரி நகரத்தை இராணுவம் அழித்தது. விடுதலைப் புலிகளை அழிப்பதற்காகவல்ல என்று கருத்துக் கூறினார் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா.

சா்வதேச நாடுகளிலிருந்து வரும் இராஜதந்திரிகள், தென்பகுதியிலிருந்து வருகை தரும் அமைச்சா்கள், பிரமுகா்களுக்கு சாவகச்சேரி நகரத்தை மட்டும் காட்டினால் போதாது .சாவகச்சேரி உட்புறக்கிராமங்களின் பின்னடைவான நிலைமைகளையும் காட்ட அவா்களைக் கூட்டிச் செல்ல வேண டும் என்றும் அவா் வலியுறுத்தினாா்.

## மந்த கதியில் பயன்படுத்தப்படும் சிறப்பு அபிவிருத்தி நிதி!

### -பிராந்திய ஆணையாளர் க.குணராசா

2002ஆம் ஆண்டுக்கு மாகாண சிறப்பு அபிவிருத்தி நிதியிலிருந்து யாழ்ப் பாண மாவட்டத்தின் மாகாண பிரதிப்பணிப்பாளர் திணைக்க ளத்துக்கும் கல்வித் திணைக்க ளத்துக்கும் வழங்கப் பட்ட நிதி உரிய வேகத்துடன் பயன்படுத் தப்படாத மந்த நிலை காணப்ப டுகிறது என்று பிராந்திய ஆணை யாளர் க.குணராசா தெரிவித்தார்.மாவட்ட அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் நேற்றைய தினம் கருத்துத்தெரிவித்த குணராசா- இந் நிலைமையைத் தவிர்க்க வேண்டும். இல்லையெனில் கடும் முயற்சியின் மூலம் மாகாண செயலாளரிடமிருந்து தெல்லிப்பழை மருத்துவமனைக்கு பன்னிரண்டு லட்சம் ரூபாய் நிதிகூட திரும்பும் நிலை ஏற்பட்டுவிடும் எனக் கவலை தெரிவித்தார்.

## சில பிரதேச சபைகளின் வாகனங்கள் துஷ்பிரயோகம்!

### அமைச்சர் மகேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

[illegible] சில உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் து[illegible]பிரயோகம் செய்யப்படுவதாக யாழ். செயலகத்தில் இடம்பெற்ற ம[illegible]ட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் மகேஸ்வரன் குற்றம் சாட்டினார்.

கடந்த ; சந்நிதி முருகன் ஆலயத் திருவிழாக்காலங்களில் பிரதேச சபையின் உத்தியோகபூர்வ தேவைக்கு வழங்கப்பட்ட வாகனங்களை, நமது கட்சியின் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு ஒரு சில உள்ளூராட்சி சபைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கட்சி பயன்படுத்தியதாக இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்

இன்னுமொரு குழு தனது வாகனங்களை பிரதேச சபைகளின் தேவைகளுக்கு அப்பாற்பட்ட தனிப்பட்டவர்களின் தேவைகளுக்கும் பயன்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

## மாநகர சபையை பழைய இடத்தில் அமைக்க 250 மில்லியன் வேண்டும்!

யாழ்ப்பாண மாநகரசபையின் பணியாளர்களின் சகல திணைக்களப்பிரிவுகளும் இயங்கிய பழைய இடத்தில் முன்னரைப்போன்ற கட்டடத்தினையும் நகர மண்டபத்தையும் (TOWN HALL) கட்டிமுடிப்பதற்குரிய நிதியைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுத்து உதவும்படி மாநகரசபையின் சார்பில் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாநகர அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் அறிவரசன், மாநகர வேலைத் திணைக்களப் பொறியியலாளர் ஆர்.சுரேஷ்குமார் ஆகியோர் அமைச்சரிடமும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் வலியுறுத்தினர். இக் கட்டிடத்தை கட்டி முடிக்க இருநூற்றி ஐம்பது மில்லியன் ரூபாய்களுக்கான திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டியுள்ளது. ஏற்கனவே இத்திட்ட நகல்கள் உள்ளூராட்சி அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு, உதவி வழங்கும் வெளிநாடுகள் நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மாநகர முதல்வர், மாநகர சபை ஆணையாளர் இருவருமே கொழும்பில் தற்பொழுது உள்ளனர் என்பதனால் அவர்களின் சார்பில் இவ்விரு மாநகரசபை அதிகாரி களும் கலந்து கொண்டனர்.

சுப்பிரமணியம் பூங்காவினைக் கட்டியெழுப்புவதற்குரிய திட்டத்திற்கும் நிதியுதவி தேவைப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டிய போது, அதன் ஒரு பகுதியை மாநகரசபை தனது வருமானத்தின் மூலம் பெறும் நிதியிலிருந்து செய்ய முன்வந்தால் அதன் மறு பகுதியைப் பெற்றுத்தர முனையலாம் என அமைச்சர் மகேஸ்வரனும் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் தெரிவித்தனர். யாழ்பபாணம் மாநகரசபை 1980களின் நடுப்பகுதியிலிருந்து நல்லூர் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள பண்டாரமாளிகை வளவு என்ற குத்தகைக்காணிக்குள், தற்காலிகமாக அமைக்கப்பட்ட கட்டிடங்களுள் இயங்கி வருகின்றது.

## நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் ஜப்பான் உதவத் தயார்!

### - யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

எவ்வளவு விரைவில் சமாதானம் நிறுவப்படுகிறதோ அவ்வளவு விரைவாக யாழ். மாவட்ட அபிவிருத்திக்காக பெருமளவு நிதியுதவியை நல்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் காத்திருக்கிறது என்று யாழ்..பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் துணைவேந்தர் கலந்து கொண்டு பல்கலைக்கழகம் தொடர்பான கருத்துக்களைத் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீடம் விரைவில் ஆரம்பிக்கப்படகூடிய சூழ்நிலையை உருவாக்குவதே தமது நோக்கம் என்றும் அவர் கூறினார். அதற்கான ஆரம்பகட்ட அறிக்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதன் சாத்தியப்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன் பொறியியல் பீடத்தின் கட்டிட வேலைகள் ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மீன்பிடியியல் கற்கைநெறியை இரண்டு ஆண்டுகளுக்குரிய விரிவான கற்கைநெறியாக்க முயற்சிகள் எடுப்பதாகவும் துணைவேந்தர் கூறினார்.

## றான் பொறியியலாளராக தகுந்தவர் நியமிக்கப்படவில்லை!


### எம்.பி ரவிராஜ் விசனம்

நீண்டகாலமாக வடக்கு அபிவிருந்திக்கான பொறுப்புக்களை வகித்து வந்த வட்க்கின் புனர்வாழ்வு புனர்நிர்மாண அதிகாரசபைக்கு உரிய கல்வித் தராதரம் இல்லாத ஒருவர் பொறியியலாளராக நியமிக்கப் பட்டிருந்தார் என யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ விசனம் தெரிவித்தார்

மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் றான் தனது நிதிப்பிரயோகங்களை மேற்கொண்டவிதம் பற்றிய விடயம் எழுப்பப்பட்டபோது, பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், ஒரு இயந்திரவியல் பொறியியல் கல்வி கற்றவரே இத்தனை காலம் ஒரு முக்கியமான அபிவிருத்தி சார்ந்த திட்டமிடலுடன் தொடர்பான அமைப்புக்கு பொறுப்பாக இருந்துள்ளார் என்றும் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகைகள் சகல விடயங்களையும் அம்பலமாக்கியுள்ளன என்றும் தெரிவித்தார்.



இடமிருந்து வலமாக அமைச்சர் மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம், கட்டடத் திணைக்களப் பொறியிலாளர் தேவராஜா



- நேற்றைய கூட்டத்தில் சமூகமளித்திருந்த ஏனைய அதிகாரிகள் -

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 13 கைதிகளை விடுவிக்க பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு!

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் பதின்மூன்று பேரை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபருக்கு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உத்தரவிட்டுள்ளார்.

குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பதின்மூன்று அரசியல் கைதிகளை விடுவிக்கவே பாதுகாப்பு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். விடுதலை செய்யப்படும் பதின்மூன்று கைதிகளி[illegible]பெரும்பாலானோர் மலையகத்தை[illegible] சேர்ந்தவர்கள் எனத் தெரியவ[illegible]ன்றது.

## சாரதிகளிடம் ஆவணங்களை பொலிஸார் பரிசோதிப்பது மனிதாபிமானமற்ற செயல்

(யாழ்ப்பாணம்)

ஒழுங்காக உரிய துரிதத்துடன் இயங்கக் கூடிய மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இல்லாத நிலையில் பொலிஸார் வாகனப் பதிவு ஆவணங்களை சாரதிகளிடம் பரிசோதிப்பது மனிதாபிமானமற்ற விடயமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

வாகனச் சாரதிகள் நிலைமையை பொலிஸாருக்கு விளங்கப்படுத்தியும் அவர்கள் தண்டப்பணம் அறவிடும் நிலைதொடர்ந்தால் தமக்காக நீதி வேண்டி மக்கள் நீதிமன்றம் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்றும் சுட்டிக் காட்டினார் விநாயகமூர்த்தி.

யாழ்ப்பாணத்தில் மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் எவரும் இல்லை. மேலும் அத்திணைக்களத்துக்குத் தேவையான ஐந்து எழுதுவினைஞர் வெற்றிடங்களில் ஒன்று மட்டுமே நிரப்பப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன் படிக்கையையடுத்து யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்துள்ள அதிகரித்த வாகனங்களால் அத்திணைக்களம் மேலும் சவால்களைச் சந்திக்கிறது.

தாம் சந்திக்கும் நெருக்கடிகளை விளக்கி கொழும்பிலுள்ள மோட்டார் வாகன ஆணையாளருக்கு அறிக்கைகள் அனுப்பியிருந்தும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலை உள்ளது. இவ்விடயத்தில் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டும் என இக் கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ்ப்பாணத்தின் உதவி வாகன ஆணையாளர் கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மோட்டார் வாகனப் பதிவுத்திணைக்களத்தில் குறைபாடுகள் அகற்றப்பட்டு, உரிய முறையில் வாகன ஆவணங்களின் தன்மைகள் சரியாக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு சாரதிகளுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட குறிப்பிட்ட கால அவகாசம் தேவை. அது வரை பொதுமக்களை மனிதாபிமானமாக நடத்தும் படியும்,அவர்களிடம் தண்டப்பணம் அறவிடுவதை நிறுத்தும் படியும் பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி யாழ்ப்பாண பொலிஸ் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அவர்கள் மேலும் தொடர்ந்து மனிதாபிமானமில்லாமல் நடந்து கொள்வார்களானால் பொதுமக்கள் உடனே நீதிமன்றம் செல்லுவதே மாற்றுவழியாகும் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

## முள்ளிக்குளத்தில் கைதான புலிகளை விடுவிக்க மேல் நீதிமன்றில் மனுத்தாக்கு!

### - ஆறு படையினரும் விடுதலையாக வாய்ப்பு? -

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டம் முள்ளிக் குளத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இரண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களைப் பிணையில் விடுதலை செய்வதற்கான மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு விடுதலைப் புலிகளை விடுதலை செய்வதற்கே பிணை மனுத் தாக்கல் செய்யப்படவுள்ளது. முன்னதாகப் புலிகள் தமது இரு உறுப்பினர்களையும் விடுதலை செய்தால் மட்டுமே தம்மால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆறு படையினரையும் விடுவிக்க முடியும் எனத் தெரிவித்திருந்தனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகிய தரப்புக்கள் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்களையடுத்தே இரு புலிகளையும் பிணையில் விடுவிக்கக் கோரும் மனு வைத் தாக்கல் செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது.

சட்டச்சிக்கல் காரணமாகவே இரு புலிகளையும் விடுவிக்க மேல் நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. புலிகள் உறுப்பினர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டால் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆறு படையினரும் விடுவிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன.

## திருமலை ஆர்ப்பாட்டம் மூன்றாவது நாளாக தொடர்கிறது

(கொழும்பு நிருபர்)

திருகோணமலையில் மூன்றாவது நாளாகவும் - விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட படையினரின் பெற்றோரும் வேறு சில சிங்கள மக்களும் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு முன் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டம் தொடர்பாக இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் பொலிஸாரும் நான்கு நாட்களுக்குள் விடுதலை செய்ய ஆவன செய்வதாக உறுதி கூறியதன் பிரகாரம் நேற்று[illegible]டன் போராட்டம் முடிவடைவதாக இருந்தது.

எனினும் நான்கு நாட்களுக்குள் படையினரை விடுவிப்பது தொடர்பாக எழுத்து மூலமான உறுதி மொழி எதுவும் தமக்கு அளிக்கப்படாததால் தாம் தொடர்ந்தும் நகருக்குச் செல்லும் வீதிகளை மறித்து போராட்டம் நடத்துவதாக வீதிகளை மறித்துப் போராட்டம் நடத்துவதாக சீனன்குடா விகாராதிபதி தெரிவித்தார்.

## தமிழ் கைதிகளின் உண்ணாவிரதம் அமைச்சர்கள் கைவிரிப்பு !

(கொழும்பு நிருபர்)

களுத்துறை, வெலிக்கடை மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் மூன்றாவது நாளாக தொடர்கின்றது.

இப் போராட்டம் தொடர்பாக நீதி அமைசசா டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார கருத்து தெரிவிக்கையில்- வெலிக்கடையில் விசேட நீதிமன்றம் இக்கைதிகளை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இக்கைதிகளை விடுதலை செய்ய இயலாது எனவும் -

இதற்கு மேல் தம்மால் எதனையும் செய்ய முடியாது எனவும் கூறியுள்ளார். இவ் விடயத்தை உள்துறை அமைச்சரே கையாள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கருத்து தெரிவிக்கையில்- இவ்விடயத்திற்கு பாதுகாப்பு அமைசசரே ஆவன செய்ய வேண்டும் எனவும் மேலதிக நடவடிக்கைகயை சட்டமா அதிபரும் இணைந்தே மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

தமிழ் கைதிகள் போராட்டம் தொடர்பாக அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா - தமிழ்க் கைதிகள் மெலிந்த மொறகொடவை சந்திக்கவே போராடுகின்றனர். ஏன் மெலிந்த கைதிகளைச் சந்திக்கவில்லை என தனக்கு தெரியவில்லை என்றும், தான் மெலிந்த மொறகொட மற்றும் சட்டமாதிபர் கமலசபேசனுடன் தொடர்பு கொண்டு பேசுவதாகவும் கூறினார்.

இப் போராட்டம் தொடர்பாக ஆசிய மனித உரிமைகள் நிலையத்தைச் சார்ந்த கந்தசாமி கருத்து தெரிவிக்கையில் - புலிகள் போர்க் கைதிகளை விடுவிப்பதற்கு முன் இரண்டு வாரத்துக்குள் சட்டச்சிக்கலை தீர்க்க முடியுமாயின் இரண்டு மாதத்திற்குள் தமிழ் அரசியற் கைதிகளை ஏன் விடுவிக்க முடியாது. இது தொடர்பில் அரசி[illegible] சாணக்கியமே மிகவும் முக்கி[illegible] என கூறினார்.

## எட்டு அதிகாரிகள்.......

நேற்று முன்தினம் மாலை 4.45 மணியளவில் அரச அதிபர் பதவி நியமனத்துக்கான கடிதம் செ.பத்மநாதனிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டது.

அன்று மாலை 5.16 மணியளவில் அவர் இதுவரை கடமையாற்றிய சமூக அபிவிருத்தி அமைச்சில் இருந்து விடுவிப்புக் கடிதம் வழங்கப்பட்டது.

இத்தனை விடயங்களும் நடைபெறும் என செ.பத்மநாதன் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. சமூக அபிவிருத்தி அமைச்சர் கூட தனது அமைச்சில் இருந்து விடுவிக்கத் தயாராக இருக்கவில்லை.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்பு கொண்ட போது, செ.பத்மநாதன் யாழ்.அரச அதிபராக நியமிப்பதில் தான் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்தே சமூக அபிவிருத்தி அமைச்சில் இருந்து விடுவிப்புக் கடிதம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் புறப்படுவதற்கு தயாராகிய செ.பத்மநாதன் யாழ்.செயலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் யாழ்.அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து தகவல் தெரிவித்தார்.

இந்தத் தகவலால் அதிகாரிகள் பலர் குழப்பமடைந்தனர். மேற்படி பதவிக்காக அரசியல் செல்வாக்குகளைப் பயன்படுத்தி முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் எதுவும் பலிக்கவில்லை.

இந்த நிலையில் நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்த செ.பத்மநாதன் நாளை யாழ்.அரச அதிபராகத் தனது பணிகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்..

எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்துவதற்காக தயாராகவுள்ள செயற்றிட்டத்தை தயாரித்தவர்களில் ஒருவன் என்ற வகையில் இதை நடைமுறைப்படுத்துவது என்பது மிகவும் இலகுவானதாக இருக்கும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

பிரதம மந்திரியின் மிக அவசரமான விசேட பணிப்புரைக்கு அமைவாக யாழ். அரச அதிபராக செ. பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

(க)

## யாழ்.சேவை அறிவிப்பாளர் தீ விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று அரியாலையில் நடைபெற்ற தீ விபத்து ஒன்றில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ் சேவை அறிவிப்பாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை ஏழு மணியளவில் இவர் தனது மோட்டார் சைக்கிள் இயந்திரத்தை இயங்கவிட்ட பின்னர் பெற்றோலை மோட்டார் சைக்கிளுக்கு விட முயன்றபோதே தீப் பற்றி இவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்.வைத்திய.......

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தனதுரையில் தெரிவித்ததாவது-

யாழ்ப்பாணம் மருத்துவமனையின் சத்திர சிகிச்சை கட்டங்கள் நவீன வசதிகளுடன் விஸ்தரிக்கப்பட வேண்டியிருந்தாலும், எக்ஸ் - றே(X-ray) படமெடுக்கும் கதிரியக்க நிலையமொன்றை அமைக்க வேண்டியுள்ளதுடன் மேலும் மருத்துவ ஆய்வு கூடங்கள், மருந்தகங்கள், களஞ்சியங்கள் என்பனவும் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இவற்றை அமைக்கவும் விஸ்தரிக்கவும் அயலிலுள்ள இராணுவ முகாங்களும், காவல் நிலையங்களும் பெரும் இடராகவேயுள்ளன என்றார்.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் - மருத்துவமனையின் அயலிலிருந்து இராணுவம் விலக்கப்படவேண்டும் என்ற பிரேரணையை கொண்டு வந்த போது யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ந.ரவிராஜ் வழி மொழிய அங்கிருந்த அமைச்சர் மகேஸ்வரன் உள்ளிட்ட அனைவரும் ஏகோபித்த மகேஸ்வரன் உள்ளிட்ட அனைவரும் ஏகோபித்த குரலில் அதனைத் தீர்மானமாக நிறைவேற்றினர். இவ்விடயம் தொடர்பாக யாழ். மருத்துவமனை நிர்வாகத்திற்கும் ஒரு சில கனிஷ்ட நிலை இராணுவ அதிகாரிகளுக்குமிடையில் உத்தியோகப்பற்றற்ற உரையாடல்கள் நடந்துள்ளன. எனினும் இவ்விடயத்தில் இரு தரப்பினரும் சரியான புரிந்துணர்வுக்கு வரமுடியவில்லை என்றும் அறியப்படுகின்றது.

இவ் வசதியீனங்கள் காரணமாக யாழ்.மருத்துவனனைக்கு வருகின்ற நோயாளிகளுக்கு நோய்க்குரிய உடனடிச் சிகிகச்சைகளை நடத்த முடியாதுள்ளதுடன், நெருக்கீடுகள் காரணமாக மருத்துவர்களும், சத்திரச் சிகிச்சை நிபுணர்களும், மருத்துவமனை நிர்வாகத்தினரும் ச[illegible]ப்பட வேண்டிய நிலைமைகளும் தோன்றுவதாகப் பணிப்பாளர் நேற்றைய கூட்டத்தில் கவலை வெளியிட்டார்.

MURTHY
2789
யாழ். FMஇல் விளம்பரம் செய்திட
யாழ்.கொழும்பு பிரயாண ஒழுங்கு செய்திட
நாள் வாடகைக்கு ஆட்டோ அமர்த்திட
மூர்த்தி விளம்பர சேவை
தேவி அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
போன்: 2222789
(சி-28)

## பலாலி....

மேற்கு, பத்தமேனி கதிரிப்பாய், தம்பாய், வளலாய், இடைக்காடு ஆகிய பகுதிகளுக்கூடாக அமைக்க முய்ற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக இந்த வேலி அமைக்கப்படவிருக்கும் பகுதிகளில், ஏற்கனவே ஒவ்வொரு 25-50 யார் தொலைவுகளில் கட்டைகள் நாட்டப்பட்டிருந்தன.

இந்தப் பகுதிகளை மையமாக வைத்தே நேற்று புல்டோசர் வாகனதத்தால் பற்றைகளை வெட்டிப் படையினர் துப்புரவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே மக்கள் இச் செயற்பாட்டைத் தடுத்தனர்.

இராணுவம் இந்த வேலியை அமைக்குமானால் இடைக்காடு மகா வித்தியாலயம், மக்கள் குடிமனைகள், பயிர்ச்செய்கை நிலங்கள் ஆகியன இராணுவக் கட்டுப்பாட்டினுள் போய்விடும் என மக்கள் அஞ்சுகின்றனர்.

இந்தச் சம்பவம் பற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பொதுமக்கள் முறையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விடுதலைப் புலிகளும் சென்று பார்வையிட்டுள்ளனர். படையினரின் இத்தகைய முயற்சி புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்து 2.5ஐ மீறுவதாக விடுதலைப்புலிகளினால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.(76)

## நெடுந்தீவு............

தப்பிச் சென்றதாகவும் , மக்கள் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவரை தடுத்து கட்டிவைத்ததாகவும் தெரியவருகிறது

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்திலிருந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து மக்களை மிரட்டியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - இச்சம்பவம் பற்றி கண்காணிப்புக் குழு விடம் நேற்றிரவு விடுதலைப்புலிகளால் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

(112)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06-10- 2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.